1278

1257

NEW METHOD
TAMIL READER

BOOK III

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 DEC 1939
MADRAS

BY
Vidwan A. M. KULANDAI

1247

PUBLISHERS
Sivalinga Vilas Book Depot
ERODE
1939

புது முறைத்

தமிழ் வாசகம்

மூன்றும் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 2 DEC 1939
MADRAS

வித்துவான்
A. M. குழந்தை
எழுதியது.

1947

A. வேலாயுதம்
சிவலிங்க விலாஸ் புத்தகசாலை
ஈரோடு
1939

[ரிஜிஸ்தர் செய்தது] [விலை 4 அணா

FIRST EDITION—1939.

The Liberty Press, G.T., Madras.

முகவுரை

'புது முறைத் தமிழ் வாசகம்' என்னும் பெயர் கொண்ட இந்நூல் வரிசை, அரசாங்கத்தார் சமீபத்தில் வெளியிட்ட பாடதிட்டத்தின்படி (Syllabus) எழுதப்பட்டது. காலத்திற்கு ஏற்ற பலவகைக் கைத் தொழில்கள் பற்றிய பாடங்களும், சுகாதார பாடங்களும், பிள்ளைகட்குரிய தோட்டவேலை முதலியனவும், பள்ளிக்கும் வீட்டுக்கும் உள்ள சம்பந்தம் உணர்த்தும் பாடங்களும், தேச பக்தி, ஊக்கம், உழைப்பு, தமிழ்ப் பற்று இவற்றை ஊட்டும் எளிய பாடங்களும், பிறவும் இந்நூல் வரிசையுள் எழுதப்பட்டுள்ளன.

பாரதியார் போன்ற சிறந்த புலவர்களுடைய, எளிய நடையில் அமைந்துள்ள பாடல்கள் இந்நூல்களில் தக்க இடங்களில் சேர்க்கப்பட்டு இருக்கின்றன. விஷயங்களை விளக்கும் படங்கள் போதுமான அளவு தரப்பட்டுள்ளன.

இந்நூல், மாணவ மாணவிகட்கு நல்ல தமிழ் அறிவையும், உலக ஞானத்தையும் ஊட்டி, அவர்களது எதிர்கால வாழ்க்கையைச் சிறப்பிக்கும் என்பது எனது நம்பிக்கை.

சித்தோடு
5—11—39.

A. M. குழந்தை

பொருள் அடக்கம்

பாடங்கள்		பக்கம்
1.	என் தாயார்	7
2.	எங்கள் பள்ளி	9
3.	பழங்கள்	12
4.	பேகன்	15
5.	பாப்பா—பாட்டு...	17
6.	காலங்காட்டி	20
7.	வீரன் 'வீரன்' ஆனான்	24
8.	வண்டி விழுந்தது	27
9.	பால்காரி	31
10.	அம்மா—பாட்டு	33
11.	போலீஸ் சேவகர்	37
12.	முழுத் திருடன்	40
13.	பருத்திக் கதை	42
14.	ஆமையும் முயலும்	45
15.	தமிழ்நாடு—பாட்டு	48
16.	ஆறு ...	52
17.	அறிவுள்ள நாய்	55
18.	கிராமம்	57
19.	முடைதல் தொழில்	60
20.	பயிர்த்தொழில்—பாட்டு	63
21.	சுடும் பழமா? சுடாத பழமா?	65
22.	அன்னங்களும் ஆமையும்	67
23.	விளையாட்டு	70
24.	வீட்டு வேலை	73
25.	எங்கள் வேலை—பாட்டு	75
26.	சிறியோர் தொண்டு	78
27.	புத்திமதி	83
28.	செய்யுட் பாடம்	88

பயிற்சி

ஒவ்வொரு வாக்கியத்திலும் குறிப்பிட்ட எழுத்து வந்துள்ள சொல்லை மட்டும் எழுது :—

எண்	வாக்கியம்	எழுத்து	சொல்
1	மாணிக்கம் வடை வாங்கினான்.	க் ங்	மாணிக்கம் ______
2	நாச்சிமுத்து ஒன்றுக்கும் அஞ்சான்.	ச் ஞ்	______ ______
3	இது பாட்டன் வாங்கின வண்டி.	ட் ண்	______ ______
4	அத்தை நேற்று வந்தார்.	த் ந்	______ ______
5	இது பாப்பா வாங்கின பம்பரம்.	ப் ம்	______ ______
6	அம்மா வாழ்த்தி அனுப்பினார்.	ம் ழ்	______ ______
7	காய்த்த மரம் பழுப்பது மெய்யே.	ய் ய்	______ ______
8	சர்க்கரை எவ்வளவு இனிப்பு.	ர் வ்	______ ______
9	வெற்றிவேல் பழம் தின்றான்.	ற் ன்	______ ______
10	நாளை ஸரஸ்வதி பூஜை.	ஸ ஜை	______ ______
11	வள்ளி புஷ்ப ஹாரம் கட்டினாள்.	ஷ் ஹா	______ ______
12	லக்ஷ்மி ஸ்ரீரங்கம் போகிறாள்.	க்ஷி ஸ்ரீ	______ ______

பயிற்சி

ஒவ்வொரு வாக்கியத்திலும் குறிப்பிட்ட எழுத்து வந்துள்ள சொல்லை மட்டும் எழுது :—

எண்	வாக்கியம்	எழுத்து	சொல்
1	பொன்னா அதோ அண்ணா வருகிறார்.	னா ணா	____ ____
2	திண்ணை ஓரத்தில் தென்னை இருக்கிறது.	ணை னை	____ ____
3	உன்னோடு சேர்ந்து கண்ணோய் வந்தது.	னோ ணோ	____ ____
4	உள்ளதை உண்டு மகிழ்வது நல்லது.	ள் ழ்	____ ____
5	நெல்லும் கொள்ளும் வாங்கு.	ல் லு ளு	____ ____ ____
6	யானை காட்டில் வாழும்.	ழு	____
7	அவன் மாடி மேலேயிருந்து கீழே இறங்கும்போது, கிணற்றுக்குள்ளே விழுந்தான்.	லே ழே ளே	____ ____ ____
8	முல்லைப்பூ வெள்ளை நிறம்.	லை ளை	____ ____
9	காலையில் மழை பெய்தது.	ழை	____
10	நாங்கள் பொய் சொல்லோம்.	லோ	____
11	அறிவுள்ளோர் பெரியவர் ஆவார்.	ளோ	____
12	இனிப் பசி தாழோம்.	ழோ	____

தமிழ் எழுத்துக்

ஃ	அ	ஆ	இ	ஈ	உ	ஊ
க்	க	கா	கி	கீ	கு	கூ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ
த்	த	தா	தி	தீ	து	தூ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ
ற்	ற	றா	றி	றீ	று	றூ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ

களின் வரிசை

எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
கெ	கே	கை	கொ	கோ	கௌ
ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
டெ	டே	டை	டொ	டோ	டௌ
ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
தெ	தே	தை	தொ	தோ	தௌ
நெ	நே	நை	நொ	நோ	நௌ
பெ	பே	பை	பொ	போ	பௌ
மெ	மே	மை	மொ	மோ	மௌ
யெ	யே	யை	யொ	யோ	யௌ
ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
லெ	லே	லை	லொ	லோ	லௌ
வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
றெ	றே	றை	றொ	றோ	றௌ
னெ	னே	னை	னொ	னோ	னௌ

பயிற்சி

படங்களின் பெயர்களையும், அவை இருக்கும் இடங்களையும், அவற்றின் உபயோகத்தையும் எழுதுக.



1. என் தாயார்



நல்லவர்	படைத்தல்	ஒப்புவிப்பேன்
கவனிக்கிறூர்	உண்ணுதல்	சரியாக
எழுப்புதல்	ஊட்டுவார்	சந்தோஷம்
நீராட்டுதல்	தினமும்	நேசிக்கிறேன்
உடைகள்	கண்ணே	முத்தம்
உணவு	அழைப்பார்	

1. இவர் என் தாயார். இவர் மிகவும் நல்லவர். இவர் என்னை அன்போடு கவனிக்கிறூர். இவர் என்னைக் காலையில் எழுப்புகிறூர். இவர் என்னை நீராட்டுகிறூர். இவர் எனக்கு நல்ல உடைகளைத் தருகிறூர். இவர் என் தலையைச் சீவுகிறூர். இவர் எனக்குப் பொட்டு இடுகிறூர்.

2. இவர் எனக்கு உணவு படைக்கிருர். இவர் நான் உண்ணும்போது பக்கத்தில் இருக்கிருர். இவர் சில சமயங்களில் எனக்கு உணவு ஊட்டுவார். இவர் 'இன்னும் சாப்பிடு' என்று உணவு படைப்பார். இவர் 'கண்ணே! வா' என்று அழைப்பார்.

3. என் தாயார், 'மகனே! படி' என்பார். நான் பாடங்கள் படிப்பேன். இவர் நான் கேட்பதை வாங்கித் தருவார். நான் அவர் சொல்படி நடப்பேன். 'தாய் சொல் கேள்' என்ருர் ஆசிரியர்.

4. தினமும் இவர் என் பாடங்களைக் கேட்பார். நான் பாடம் ஒப்புவிப்பேன். நான் சரியாக ஒப்புவிப்பேன். என் தாயார் சந்தோஷப்படுவார். அவர் எனக்கு முத்தம் தருவார். நான் என் தாயாரை நேசிக்கிறேன்.

1. கேள்விகள்

1. உன் தாயார் உனக்கு என்ன செய்கிருர்?
2. உன் பாடங்களைப் பற்றித் தாயார் என்ன செய்கிருர்?
3. நீ ஏன் தாயாரை நேசிக்கிருய்?

2. பயிற்சி

1. உன் தாயாரும், உன் பாடங்களும் என்பது பற்றி மூன்று வாக்கியங்கள் சொல்; பிறகு அவ்வாக்கியங்களை எழுது.
2. உன் தாயார் உன்னை எப்படிக் கவனிக்கிருர்—என்பதை மூன்று வாக்கியங்களில் சொல்; பிறகு அவற்றை எழுது.

3. நல்லவர், படைத்தல், ஊட்டுவார், உடைகள், சந்தோஷம், நேசிக்கிறேன்—இந்த வார்த்தைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

4. இந்தப் பாடத்தில் எத்தனை பகுதிகள் (பாராக்கள்) இருக்கின்றன? முதல் பாராவில் எத்தனை வாக்கியங்கள் இருக்கின்றன?

5. எழுத்து; சொல்; வாக்கியம்—ஒவ்வொன்றுக்கும் ஓர் உதாரணம் எழுது.

---

2. எங்கள் பள்ளிக்கூடம்

வாசிக்கிறேன்	முல்லை	முடிகிறது
அன்புள்ளவர்	இறைத்தல்	திருவாளர்
சொல்லித்தருவார்	இருவாக்ஷி	மறுபடி
தொடங்குகிறது	மாலைவேளை	பாய்ச்சுதல்
	பிரியம்	

அண்ணன் :—கண்ணா, உன் பள்ளிக்கூடம் எங்கே இருக்கிறது?

கண்ணன் :—அண்ணா, என் பள்ளிக்கூடம் வடக்குத் தெருவில் இருக்கிறது.

அண்ணன் :—உன் பள்ளிக்கூடத்தில் எத்தனை வகுப்புகள் இருக்கின்றன?

கண்ணன் :—என் பள்ளிக்கூடத்தில் ஐந்து வகுப்புகள் இருக்கின்றன.

அண்ணன் :—உன் பள்ளிக்கூடத்தில் எத்தனை ஆசிரியர்கள் இருக்கிறார்கள்?

கண்ணன் :—ஐந்து ஆசிரியர்கள் இருக்கிறார்கள்.

அண்ணன் :—நீ எந்த வகுப்பில் வாசிக்கிறாய் ?

கண்ணன் :—நான் மூன்றாம் வகுப்பில் வாசிக்கிறேன்.

அண்ணன் :—உன் ஆசிரியர் யார் ?

கண்ணன் :—என் ஆசிரியர் திருவாளர் மாணிக்கவாசகர் என்பவர்.

அண்ணன் :—அவர் நல்லவரா ?

கண்ணன் :—ஆம், அவர் மிகவும் நல்லவர். அவர் எங்களிடம் அன்புள்ளவர். அவர் நன்றாய்ப் பாடம் சொல்லித் தருபவர்.

அண்ணன் :—உன் பள்ளிக்கூடம் எப்பொழுது தொடங்குகிறது ? எப்பொழுது முடிகிறது ?

கண்ணன் :—காலையில் எட்டரை மணிக்குத் தொடங்குகிறது ; பகல் 11 மணிக்கு முடிகிறது. மறுபடியும் பகல் 2 மணிக்குத் தொடங்குகிறது ; நாலரை மணிக்கு முடிகிறது.

அண்ணன் :—உங்கள் பள்ளிக்கூடத்தில் தோட்டம் உண்டா ?

கண்ணன் :—உண்டு. ஆனால், அது சிறிய தோட்டம். அதில் ரோஜா, மல்லிகை, சாமந்திச் செடிகள் இருக்கின்றன. முல்லை, இருவாக்ஷிக் கொடிகள் உள்ளன. கத்தரி, வெண்டைச் செடிகள் இருக்

கின்றன. தோட்டத்தின் ஓரமாக வாழை மரங்கள் உண்டு. இவற்றை நாங்கள் தினமும் கவனித்து வருகிறோம். மாலை வேளையில் நாங்களே தண்ணீர் பாய்ச்சுகிறோம்.

அண்ணன்: நீங்களா தண்ணீர் பாய்ச்சுகிறீர்கள்?

கண்ணன் :—ஆம். அண்ணா, தோட்டக்காரன் இல்லை. பிள்ளைகளாகிய நாங்களே செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சுகிறோம். தோட்டத்தின் பக்கத்தில் கிணறு ஒன்று இருக்கிறது. நாங்கள் அதிலிருந்து நீர் இறைப்போம். நீரை வாய்க்காலில் விடுவோம். அந்த நீரைச் செடிகளுக்குப் பாய்ச்சுவோம்.

அண்ணன் :—அப்படியா! கண்ணா, நீயும் தோட்ட வேலை செய்கிறாயா?

கண்ணன் :—ஆம். அண்ணா, எனக்கு அதில் பிரியம் அதிகம்.

1. கேள்விகள்

1. உன் பள்ளிக்கூடத்தில் உள்ள வகுப்புகள் எத்தனை?
2. உன் ஆசிரியர் பெயர் யாது?
3. உன் பள்ளிக்கூடத்தில் தோட்டம் உண்டா?
4. அதில் உள்ள செடிகள் எவை? கொடிகள் எவை?
5. செடிகளுக்குத் தண்ணீர் பாய்வது எப்படி?

2. பயிற்சி

1. உன் பள்ளிக்கூடம் பற்றி மூன்று வாக்கியங்கள் சொல்; பிறகு அவற்றை எழுது.

2. பள்ளிக்கூடத் தோட்டம்பற்றி மூன்று வாக்கியங்கள் சொல்; பிறகு அவற்றை எழுது.

3. ஆசிரியர், பிரியம், நன்ருய், இருவாக்ஷி—ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

4. 'நீ எந்த வகுப்பில் வாசிக்கிருய் ?' 'அவர் மிகவும் நல்லவர்.' ஒவ்வொரு வாக்கியத்திலும் எத்தனை சொற்கள் இருக்கின்றன ?

5. வாழை மரங்கள் உண்டு.
தோட்டக்காரன் இல்லை.

உண்டு, இல்லை என்னும் இரண்டு சொற்களும் ஒரே பொருள் உடையவை அல்ல. அவை எதிரான பொருள் உள்ளவை. 'உண்டு' என்னும் சொல் 'இல்லை' என்னும் சொல்லின் எதிர்ச்சொல் அல்லது எதிர்ப்பதம். × இந்த அடையாளம் எதிர்ப்பதம் என்பதைக் குறிக்கும்.

உண்டு × இல்லை இல்லை × உண்டு
தொடங்குகிறது × முடிகிறது

---

3. பழங்கள்

கோடைக்காலம்	ஆரஞ்சு	அடுக்கு அடுக்காய்
விதை	தட்டு	உடையன
நோயாளிகள்	சாறு	மற்றவை
அப்படியே	பலம்	உஷ்ணம்
தரும்	உண்டாக்கும்	கிடைப்பவை

1. தம்பி! இது பழக் கடை. பழங்கள் தட்டுகளில் வைக்கப்பட்டு இருக்கின்றன. அவை அடுக்கு

அடுக்காய் வைக்கப்பட்டு இருக்கின்றன. பழங்கள் பல நிறங்களை உடையனவாய் இருக்கின்றன.

2. இக்கடையில் இருக்கும் பழங்கள் எவை? கீழே இருப்பவை பலாப் பழங்கள். தட்டுகளில் இருப்பவை ஆரஞ்சுப் பழங்கள். பலகை மீது



இருப்பவை மாம்பழங்கள். மாம்பழங்களுக்குப் பக்கத்தில் இருப்பவை வாழைப் பழங்கள். பலாப் பழமும், வாழைப் பழமும் கோடைக் காலத்தில் கிடைப்பவை. மற்றவை எப்பொழுதும் கிடைப்பவை. பலாப் பழம் பெரியது, மாம்பழம் சிறியது.

3. பலாப் பழத்தில் சுளைகள் உண்டு. ஆரஞ்சுப் பழத்திலும் சுளைகள் உண்டு. மாம்பழத்தில் கொட்டை உண்டு. ஆரஞ்சுப் பழத்தில் விதைகள்

உண்டு. வாழைப் பழத்தில் விதைகளும் இல்லை; கொட்டையும் இல்லை.

4. பலாச்சுளை உஷ்ணத்தை உண்டாக்கும். மாம்பழமும் அப்படியே. ஆரஞ்சுப் பழம், வாழைப் பழம் உடம்புக்கு நல்லவை. ஆரஞ்சுப் பழம் நோயாளிகளுக்கும் உதவும். அதன் சாறு உடம்புக்குப் பலம் தரும்.

1. கேள்விகள்

1. பழக்கடையில் உள்ள பழங்கள் எவை?
2. சுளை உள்ள பழங்கள் எவை? விதையுள்ள பழம் எது? ஒன்றும் இல்லாத பழம் எது?
3. உஷ்ணத்தை உண்டாக்கும் பழங்கள் எவை?
4. உடம்புக்கு நல்ல பழங்கள் எவை?
5. சாறு உடைய பழம் எது?

2. பயிற்சி

1. நீ பார்த்த பழக்கடையில் இருந்த பழங்களின் பெயர்களைக் கூறு; பிறகு அப்பெயர்களை எழுது.
2. கொட்டையுள்ள பழங்கள் ஐந்து சொல்; விதையுள்ள பழங்கள் ஐந்து சொல்; அப்பெயர்களை எழுது.
3. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை எழுது:—

(அ) ஆரஞ்சுப்பழம்————நல்லது.

(ஆ) அதன்————உடம்புக்கு————.

(இ) வாழைப்————விதை————.

(ஈ) மாம்பழத்தில்————உண்டு.

எதிர்ப்பதங்கள் :—பெரியது × சிறியது.

சிறியது × பெரியது.

4. பேகன்

போர்வை	வள்ளல்	நுழைந்தான்
போர்த்துகிறான்	சகியாதவன்	கஷ்டம்
உயர்ந்த	தருமகுணம்	இரக்கம்
படிப்பாளி	உலாவப் போதல்	விலை உயர்ந்தது
வேடிக்கை	பேகன்	நினைக்கிறீர்கள்
வருத்தம்	குளிர்	யார்

குறிப்பு:—கீழே எழுதியுள்ள கதையை மனத்திற்குள்படி; படித்த பிறகுசொல்.

1. இந்தப் படத்தைப் பாருங்கள். இது ஒரு பூந்தோட்டம். இதில் ஒருவன் மயிலுக்குப் போர்வை போர்த்துகிறான். இது என்ன வேடிக்கை! இவன்

யார்? ஏன் மயிலுக்குப் போர்வை போர்த்துகிறுன்?

2. இவன் தமிழ் அரசன். இவன் பெயர் பேகன். இவன் உயர்ந்த படிப்பாளி. இவன் தரும குணம் உடையவன். இவன், பிறர் வருத்தம் சகியாதவன். இவன், பிறர் கேட்பதைக் கொடுப்பவன்; அதனுல், 'வள்ளல்' எனப் பெயர் பெற்றுன்.

3. இவன் ஒரு நாள் உலாவப் போனுன். இவன் ஒரு பூந்தோட்டத்திற்குள் நுழைந்தான். அங்கு மயில் ஒன்று இருந்தது. மழை என்றுல் மயிலுக்குச் சந்தோஷம். அதனுல், அது ஆடிக்கொண்டு இருந்தது.

4. பேகன், மயில் ஆடுவதைக் கண்டான். அவன், மயில் குளிரால் கஷ்டப்படுவதாக எண்ணினுன். அவன் அதன் மீது இரக்கம் கொண்டான். பேகன் தன் மேல் போர்வையை எடுத்தான்; அதனை மயிலின் மீது போர்த்தான். அப்போர்வை விலை உயர்ந்தது. நீங்கள் பேகனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

1. கேள்விகள்

1. படத்தில் என்ன பார்க்கிறீர்கள்?
2. பேகன் யார்? அவனைப்பற்றி என்னதெரியும்?
3. மயில் என்ன செய்தது? ஏன் செய்தது?
4. பேகன் ஏன் அதற்குப் போர்வை போர்த்தான்?
5. பேகனைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

2. பயிற்சி

1. பேகனைப் பற்றி மூன்று வாக்கியங்கள் சொல்; பிறகு அவற்றை எழுது.
2. மயிலைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல்; பிறகு அவற்றை எழுது.
3. தோட்டத்தைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல்; அவற்றை எழுது.
4. போர்வை, படிப்பாளி, தோகை, இரக்கம்—ஒவ்வொன்றையும் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.
5. கோடிட்ட இடங்களை நிரப்பு :—

(அ) பேகன்————படிப்பாளி.
(ஆ) ———போர்வை———உயர்ந்தது.
(இ) மழை———மயிலுக்குச்————.
(ஈ) மயில்————விரித்து————.

---

5. பாப்பா—பாட்டு

புறஞ்சொல்லல்	தெய்வம்	திடம்	அமிழ்தம்
அண்டி	துணை	போராடு	இனிது
பிழைக்கும்	தீங்கு	கெடுதி	ஆன்றோர்
ஆதரித்தல்	சோம்பல்	திருநாடு	பெற்ற
நம்மை	மாட்டாது	தட்டாதே	தேம்பி

1. வண்டி இழுக்கும் நல்ல குதிரை,—நெல்
வயலில் உழுதுவரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—இவ்வை
ஆதரிக்க வேண்டுமடி பாப்பா.

2. பொய்சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ்சொல்லல் ஆகாது பாப்பா.
தெய்வம் நமக்குத்துணை பாப்பா—ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா.

3. சோம்பல் மிகக்கெடுதி பாப்பா—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா.
தேம்பி அழுங்குழந்தை நொண்டி—நீ
திடங்கொண்டு போராடு பாப்பா.

4. தமிழ்த்திரு நாடுதனைப் பாப்பா—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா.
அமிழ்தில் இனியதடி பாப்பா—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

—பாரதியார்.

பயிற்சி 4

I. பிரித்து எழுது:

உதாரணம் :—விதையுள்ள = விதை உள்ள

1. அன்புள்ளவர் =
2. அதிலிருந்து =
3. இனியதடி =
4. போராடு =
5. தாயென்று =
6. புறஞ் சொல்லல் =

II. தனிவாக்கியங்களாகப் பிரித்து எழுது:

உதாரணம் :—

பலாப்பழமும் மாம்பழமும் கோடைக்காலத்தில் கிடைப்பவை.

பலாப்பழம் கோடைக்காலத்தில் கிடைப்பது.

மாம்பழம் கோடைக்காலத்தில் கிடைப்பது.

1. ஆரஞ்சுப்பழம், வாழைப்பழம் உடம்புக்கு நல்லவை.
2. மயில் தோகையை விரித்து ஆடிக்கொண்டு இருந்தது.
3. மல்லிகை சாமந்திச் செடிகள் இருக்கின்றன.

பயிற்சி 5

I. சேர்த்தெழுது :

உதாரணம் :—ஒன்று இருந்தது = ஒன்றிருந்தது.

1. பொட்டு இடுகிறார் =
2. உணவு ஊட்டுகிறார் =
3. அவர் எனக்கு =
4. விலை உயர்ந்தது =
6. வயலில் உழுதுவரும் =

II. இரண்டு வாக்கியங்களையும் ஒன்று சேர்த்து எழுது :

உதாரணம் :—

எப்பொழுது தொடங்குகிறது? எப்பொழுது முடிகிறது?
எப்பொழுது தொடங்கி எப்பொழுது முடிகிறது?

1. காலை 10 மணிக்குத் தொடங்குகிறது.
பகல் 12 மணிக்கு முடிகிறது.

2. தட்டங்களில் வைக்கப்பட்டு இருக்கின்றன.
அடுக்கு அடுக்காய் வைக்கப்பட்டு இருக்கின்றன.

3. பலாப்பழத்தில் சுளைகள் உண்டு.
ஆரஞ்சுப் பழத்திலும் சுளைகள் உண்டு.

6. காலம் காட்டி (கடிகாரம்)



முதல்	சேர்த்தால்	சுற்றுதல்	பங்கு
வரை	குறிப்பது	நிமிஷம்	கோடு
அல்லவா	அப்படியானால்	கடிகாரம்	தரம்
அப்போது	இடையில்	அவற்றுள்	முள்
அடுத்த	அடையும்	காலங்காட்டி	எண்
இப்படியே	கொண்டது	நேரம்	முறை

தம்பி :—அண்ணா, மணி பத்தரை என்று சொன்னாயே, எப்படிக் கண்டு பிடித்தாய்?

அண்ணன் :—தம்பி, இந்தக் கடிகாரத்தைப் பார்: இதில், 1 முதல் 12 வரை எண்கள் இருக்கின்றன அல்லவா? அவற்றுள் ஒவ்வோர் எண்ணும் ஒரு மணியைக் குறிப்பது. இதில் இரண்டு

முட்கள் இருக்கின்றன பார் : பெரிய முள் 12 எண்களையும் ஒரு முறை சுற்றி வரும். அப்போது சிறிய முள் ஓர் எண்ணில் இருந்து அடுத்த எண்ணை அடையும். சிறிய முள் மணியைக் காட்டுவது. பெரிய முள் நிமிஷத்தைக் காட்டுவது.

தம்பி :—அண்ணா, நிமிஷம் என்றால் என்ன ?

அண்ணன் :—ஒரு மணிக்கு 60 நிமிஷம். நிமிஷம் என்பது ஒரு மணி நேரத்தில் அறுபதில் ஒரு பங்கு. கடிகாரத்தைப் பார் : இரண்டு எண்களுக்கு இடையில் 5 கோடுகள் இருக்கின்றன. அவை 5 நிமிஷங்கள். இப்படியே 12 எண்களுக்கும் இடையில் (12×5) 60 கோடுகள் இருக்கின்றன. நிமிஷ முள் இந்த அறுபது கோடுகளையும் ஒருதரம் சுற்றினால் ஒருமணி ஆகும். ஆதலால், 60 நிமிஷம் கொண்டது ஒரு மணி ஆகும்.

தம்பி :—எத்தனை மணி கொண்டது ஒரு நாள் ?

அண்ணன் :—தம்பி, ஒருநாள் 24 மணி கொண்டது. அவற்றுள் பகல் 12 மணி கொண்டது. இரவு 12 மணி நேரம் கொண்டது. பகல் என்பது காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரையில் உள்ள நேரம். இரவு என்பது மாலை 6 மணியில் இருந்து காலை 6 மணிவரையில் உள்ள நேரம்.

தம்பி :—அப்படியானால், கடிகாரத்தில் 24 எண்கள் இல்லையே ! கடிகாரம் ஒரு நாளைக் காட்டாதோ ?

அண்ணன் :—தம்பீ, கடிகாரத்தில் உள்ளவை 12 எண்களே. அவற்றைச் சிறிய முள் இரண்டு முறை சுற்றும். அப்போது ஒருநாள் ஆகும். சிறிய முள் 6-ம் எண்ணில் இருந்து ஒரு முறை முழுவதும் சுற்றினல் பகல் ஆகும். இரண்டாம் முறை சுற்றினல் இரவு ஆகும். இரண்டையும் சேர்த்தால் ஒரு நாள் ஆகும்.

தம்பி :—அண்ண, கடிகாரத்துக்கு வேறு பெயரும் உண்டோ ?

அண்ணன் :—ஆம். அது காலம் காட்டுகிறது அல்லவா? அதனல் அது காலம் காட்டி எனப்படும்.

எதிர்ப்பதங்கள் .—

காலை × மாலை பகல் × இரவு சிறிய × பெரிய

1. கேள்விகள்

1. காலங் காட்டி என்றல் என்ன ?
2. கடிகாரம் காலங் காட்டுவது எப்படி ?
3. பகல் இரவு என்றல் என்ன ?

2. பயிற்சி

1. பகலைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல் ; பிறகு அவற்றை எழுது.
2. இரவைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல்; பிறகு அவற்றை எழுது.
3. கடிகாரம் காலம் எப்படிக் காட்டுகிறது—என்பதுபற்றி 3 வாக்கியங்கள் சொல் ; பிறகு அவற்றை எழுது.

4. காலை, பகல், சிறிய—எதிர்ப்பதங்கள் சொல்.

5. கோடிட்ட இடங்களில் வார்த்தைகளை அமைத்து எழுது:

(அ) கடிகாரத்தின் ——— முள் நிமிஷம் ———.
(ஆ) சிறிய ——— ———க் காட்டும்.
(இ) கடிகாரத்தில் ——— எண்களை ———.
(ஈ) ——— மணி நேரம் ——— ஆகும்.

6. குறிப்பது, முறை, நேரம், சுற்றுதல்—ஒவ்வோர் சொல்லையும் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.

---

7. வீரன் 'வீரன்' ஆனான்

மிகுந்த	வீரன்	மெய்யாகவே	
தேர்ச்சி	ஆச்சரியம்	என்பவன்	
சோம்பி	விரும்பினான்	சுற்றிக்கொண்டனர்	
குஸ்தி	தினந்தோறும்	வீரம்	
குத்துச்சண்டை	தாவுதல்	புகழ்ந்தனர்	
பாரம் சுமத்தல்	பயிற்சி	செயல்	சர்க்கஸ்

1. வீரன் என்பவன் பலம் இல்லாதவன். அவன் வேலை செய்வதே இல்லை. அவன் எப்பொழுதும் சோம்பி இருப்பான். அதனால், எல்லோரும் அவனைப் 'பலம் இல்லாத வீரன்' என்பார்கள். வீரன் ஊர் திருமங்கலம்.

2. வீரன் இருந்த ஊருக்குச் சர்க்கஸ் வந்தது. சர்க்கஸ்காரர் பலம் மிகுந்தவர்

கள். அவர்கள் குஸ்தி, குத்துச் சண்டை, தாண்டு



தல், ஓடுதல், பாரம் சுமத்தல் முதலிய வேலைகளைச் செய்து காட்டினுர்கள்.

3. வீரன் அவ்வேலைகளைக் கண்டான். அவன் ஆச்சரியப்பட்டான். அவன் சர்க்கஸ்காரரைப் பார்த்தான். அவர்களைப் போலத் தானும் ஆக விரும்பினுன். அதனுல், அவன் சர்க்கஸில் சேர்ந்து கொண்டான்.

4. வீரன் தினந்தோறும் ஓடுதல், நீந்துதல், தாவுதல், தாண்டுதல் முதலிய பயிற்சிகளைச் செய்தான். பிறகு வீரன் குஸ்தி, குத்துச் சண்டை இவற்றிலும் தேர்ச்சி பெற்ருன். ஆ! அப்பொழுது வீரன் மெய்யாகவே ‘வீரன்’ ஆனுன்.



5. வீரன் திரும்பித் தன் ஊருக்கு வந்தான். ஊரார் அவனைச் சுற்றிக் கொண்டனர். வீரன் புலியோடு சண்டையிட்டுக் காட்டினுன். ஊரார் அவன் வீரத்தைப் புகழ்ந்தனர். ‘இவன் பெயரளவில் வீரன் ஆக இருந்தான்; இப்பொழுது செயல் அளவிலும் வீரன் தான்’ என்று ஊரார் அவனைப் பாராட்டினர்.

1. கேள்விகள்

1. வீரன் முதலில் எப்படி இருந்தான் ?
2. வீரன் ஏன் சர்க்கஸில் சேர்ந்தான் ?
3. உடல் பயிற்சிகள் எவை?
4. வீரன் 'வீரன்' ஆனது எப்படி ?
5. நீ அவன் செய்தவற்றைச் செய்கிறாயா ?

2. பயிற்சி

1. இந்தப் பாடத்தில் எத்தனை பகுதிகள் இருக்கின்றன ?
2. ஒவ்வொரு பகுதியும் தெரிவிக்கும் முக்கியக் கருத்து என்ன ?
3. இக்கதையின் சாராம்சம் என்ன ?

உதாரணம் :—1வது பகுதி—வீரன் ஒரு சோம்பேறி. ஊரார் அவனை இகழ்ந்தனர் என்பது.

2 வது பகுதி—சர்க்கஸ் காரரின் வேலைகள்.

3 வது பகுதி—வீரன் அவர்களைப் போலத் தானும் ஆக எண்ணினான் ; சர்க்கஸில் சேர்ந்தான் என்பது.

4 வது பகுதி————.

5 வது பகுதி————.

'கட்டாயம் உடற்பயிர்ச்சி செய்ய வேண்டும்' என்பது இக்கதையின் சாராம்சம்.

8. வண்டி விழுந்தது

(சிறு நிகழ்ச்சி)

குடைசாய்ந்தது	பள்ளம்	உடைப்பு
கவிழ்ந்தது	முடிவு	விடாமல்
இருட்டு	கோவையாக	

ஆசிரியர்:—முருகா, நேற்று ஒரு வண்டி குடை சாய்ந்து விட்டதாமே உனக்குத் தெரியுமா?

முருகன்:—எனக்குத் தெரியாதே ஐயா.

மணி:—ஐயா, எனக்குத் தெரியும். நான் வண்டி விழுந்த இடத்திற்குப் போய்ப் பார்த்தேன்.

ஆசிரியர் :—மணி, வண்டி ஏன் கவிழ்ந்தது?

மணி :—இருட்டாய் இருந்தது. வண்டிக்காரன் தூங்கிக்கொண்டு போனுனும். வண்டி விழுந்து விட்டதாம்.

ஆசிரியர் :—அதனுல் வண்டி விழுமா?

பொன்னன் :—இல்லை ஐயா, நேற்று மாலை நன்ருக மழை பெய்ததல்லவா? அதனுல் பாதை எங்கும் உடைப்புகள் உண்டாயின. வண்டிக்காரன் அதைக் கவனிக்கவில்லை. வண்டியின் ஒரு சக்கரம் பள்ளத்தில் இறங்கி விட்டது. அதனுல், வண்டி குடைக் கவிழ்ந்து விட்டது, ஐயா.

ஆசிரியர் :—ஆமாம். கோவிந்தா ? வண்டி குடைக் கவிழ்ந்து விட்டதைப் பற்றி, முதலில் இருந்து முடிவு வரை கோவையாகச் சொல் பார்க்கலாம்.



கோவிந்தன் :—நேற்று மாலை நன்ருக மழை பெய்தது. மூன்று மணி நேரம் விடாமல் மழை பெய்தது. பெருவெள்ளம் வந்தது; பாதையைப் பள்ளம் உண்டாக்கி விட்டது. மழை நின்றது. மிகுந்த இருட்டாய் இருந்தது. ஒரு வண்டி பாதையில் போனது. வண்டிக்காரன் தூங்கி விட்டான். வண்டியின் ஒரு சக்கரம் பள்ளத்தில் இறங்கியது. அதனுல் வண்டி குடை சாய்ந்தது. வண்டிக்காரனுக்கு ஆபத்து ஒன்றும் இல்லை. பக்கத்துத் தோட்டக்காரர்

வந்து வண்டியைத் தூக்கி நிறுத்தினர். பிறகு வண்டிக்காரன் வண்டியை ஓட்டிச் சென்றான்.

ஆசிரியர் :—ஆமாம். நாம் பார்த்த ஒன்றை இவ்வாறு கோவையாகச் சொல்லவும், சொல்லியதை எழுதவும் தெரிந்து கொள்ள வேண்டும்.

. .

1. கேள்விகள்

1. வண்டி ஏன் குடைக்கவிழ்ந்தது ?
2. மழையால் என்ன ஏற்பட்டது ?
3. வண்டிக்காரன் என்ன செய்து கொண்டு போனான் ?
4. வண்டியை யார் தூக்கி நிறுத்தினர் ?

2. பயிற்சி

1. மழை பெய்ததைப் பற்றி 3 வாக்கியங்கள் சொல்; பிறகு அவற்றை எழுது.
2. வண்டி குடை சாய்ந்ததைப் பற்றி 3 வாக்கியங்கள் சொல்; அவற்றை எழுது.
3. கோடிட்ட இடங்களை நிரப்பு :—

(அ) நேற்று——நன்றாக———பெய்தது.

(ஆ) பாதையைப்—— —உண்டாக்கி———.

(இ) ————ஒரு சக்கரம்————இறங்கினது.

(ஈ) வண்டிக்காரனுக்கு———ஒன்றும்———.

9. பால்காரி

புறப்பட்டாள்	இடும்	நெருங்குவார்கள்
பெய்தது	அலட்சியம்	விற்க
அமர்ந்தாள்	பாவம்	வழிந்து
பின்வருமாறு	வாசல்படி	தவறு
எண்ணினுள்	பணக்காரி	அறிந்தாள்
லாபம்	தொடங்குவார்கள்	உருண்டது
வாங்குவேன்	ஆவேன்	

குறிப்பு :—கீழே உள்ள கதையை மனத்திற்குள்படிப் படித்த பிறகு சொல்.

1. ஓர் ஊரில் ஒரு பால்காரி இருந்தாள். ஒரு நாள் அவள் பாலை விற்கப் புறப்பட்டாள். அப்போது மழை பெய்தது. அதனுல், அவள் ஒரு வீட்டுத் திண்ணை மீது அமர்ந்தாள். பால் குடத்தைக் கீழ் வாசல்படியில் வைத்தாள்.

2. மழை பெய்து கொண்டே இருந்தது. பால் காரி பின் வருமாறு தனக்குள்ளே எண்ணினுள். "நான் இந்த பாலை விற்பேன். அதிக லாபம் வரும். அந்தப் பணத்திற்குக் கோழிகள் வாங்குவேன். கோழிகள் முட்டை இடும். அந்த முட்டைகளில் இருந்து குஞ்சுகள் தோன்றும். அவை பெரியவை ஆனதும் கோழிகளை விற்பேன். இப்படியே செய்தால் எனக்கு மிகுந்த பணம் கிடைக்கும். நான் பணக் காரி ஆவேன்.

3. "அப்பொழுது ஊரில் உள்ள பணக்காரப் பெண்கள் என்னிடம் வருவார்கள். அவர்கள் என் காலண்டை வந்து உட்காருவார்கள். அவர்கள் பேசத் தொடங்குவார்கள். நான் அவர்களை அலட்சியம் செய்வேன். அவர்கள் மேலும் பேச நெருங்குவார்கள். அப்பொழுது நான் அவர்களை இப்படித் தான் உதைப்பேன்."



4. இப்படிச் சொல்லிக் கொண்டே அவள் படி மீது இருந்த பால் குடத்தை உதைத்தாள். ஐயோ, பாவம்! உடனே பால் குடம் உருண்டது. பால் தரையில் வழிந்து ஓடிற்று. அப்பொழுதுதான் பால்காரி தான் செய்தது தவறு என்பதை அறிந்தாள். அவள் வருத்தத்தோடு வீடு திரும்பினுள்.

1. கேள்விகள்

1. பால்காரி ஏன் பால்விற்கப் போகவில்லை?
2. அவள் எங்கே தங்கினுள்? பால் குடம் எங்கே இருந்தது?
3. அவள் என்ன நினைத்தாள்?
4. அவள் ஏன் பால் குடத்தை உதைத்தாள்?
5. இப்பாடத்தால் நீ அறியும் நீதி யாது?

2. பயிற்சி

1. பால்காரி நினைத்ததை மூன்று வாக்கியங்களில் சொல்; பின்னர் அவற்றை எழுது.
2. மழையைப் பற்றி 3 வாக்கியங்கள் சொல்; அவற்றை எழுது.
3. பால்காரி, பணக்காரி, அலட்சியம், அமர்ந்தாள், பின்வருமாறு—ஒவ்வொன்றையும் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.
4. கோடிட்ட இடங்களை நிரப்பு:—

   (அ) படத்தில்———பால்காரி.

   (ஆ) நான்———அலட்சியம்———.

   (இ) படி மீது———பால்———உதைத்தாள்.

   (ஈ) அவை———யவை ஆனதும்———விற்பேன்.
5. 3-வது பகுதியின் கருத்து என்ன?

10. அம்மா—பாட்டு

துணிமணிகள்	உயிர்	தேடுவை
பாங்காய்	என்ருல்	காப்பவர்
குளிப்பாட்டி	ஒருமுறை	போய்வந்தால்
தைலம்	இருமுறை	என்னுடை
கண்முன்	தின்பண்டம்	என்பாய்
தேய்த்து	இன்றே	அன்னய்
கடவுள்	முடித்தவுடன்	காணும்

1. ஒருமுறை 'அம்மா'! என்ருலே,
இருமுறை 'கண்ணே'! என்பாயே.
2. 'அம்மா! எனக்குத் தின்பண்டம்'
என்ருல் வாங்கித் தருவாயே.
3. 'இன்றே வேண்டும் துணிமணிகள்'
என்ருல் உடனே தருவாயே.
4. பாடம் படித்தே முடித்தவுடன்
பாட்டுச் சொல்லித் தருவாயே.
5. பள்ளிக் கூடம் போய்வந்தால்
பாங்காய் முத்தம் தருவாயே.
6. உடம்பைத் தேய்த்துக் குளிப்பாட்டி
உடைகள் அழகாய் உடுத்துவையே.
7. அம்மா தலைநோய் என்ருலே
அன்பாய்த் தைலம் தேய்ப்பாயே.
8. என்னைக் காண விட்டாலே
அன்னய்! உடனே தேடுவையே.
9. அம்மா! என்னை உன்போலே
அன்பாய்க் காப்பவர் எவருண்டே!
10. கண்முன் காணும் கடவுள்நீ
என்னுடை உயிரும் எல்லாம்நீ.

—வித்துவான், A. M. குழந்தை

பயிற்சி 6

I. கீழ்க்கண்ட வாக்கியங்களைப் பூர்த்தி செய் :—

1. இந்த மோட்டாரை நிறுத்த ————.
2. படிமீது இருந்த ————.
3. புலியோடு சண்டை யிட்டு ————.
4. தடை இல்லாமல் போக ———.
5. தேங்காய் பறிக்க ————.
6. அவனைக் கண்டதும் ————.

II. ஒரே பொருள் உள்ள சொற்களை ஒன்று சேர் :—

கடிகாரம்	போகும்
தரம்	கெடுதி
அதிகம்	மீது
அமர்ந்தாள்	காலங்காட்டி
தொடங்கும்	முறை
நேரம்	மிகுந்த
புகழ்ந்தனர்	உட்கார்ந்தாள்
மேல்	ஆரம்பம்
செல்லும்	காலம்
அபாயம்	பாராட்டினர்

பயிற்சி 7

I. வீரன் ஊர் திருமங்கலம்.

வயலில் உழுதுவரும் மாடு.

நான் ஒரு கோழி வாங்குவேன்.

வண்டி இழுக்கும் நல்ல குதிரை.

வீரன்—இது ஒரு மனிதனுடைய பெயர்.

திருமங்கலம்—ஒரு ஊரின் பெயர்.

வயல்———ஒரு இடத்தை அறிவிக்கும் பெயர்.

மாடு———ஒரு மிருகத்தைக் குறிக்கும் சொல்.

கோழி———ஒரு பறவையைக் குறிக்கும் சொல்.

வண்டி———ஒரு சாமானை (பொருளை)க் குறிக்கும் சொல்.

இவ்விதம் மனிதர், மிருகம், பறவை, சாமான், ஊர் முதலிய இடங்கள் இவைகளின் பெயர்களைக் குறிக்கும் சொற்களுக்குப் 'பெயர்ச் சொற்கள்' என்று பெயர். ஒரு சொல் ஏதாவது ஒன்றின் பெயர் ஆனால் அச்சொல் பெயர்ச் சொல் ஆகும்.

9-ம் பாடத்தில் வந்துள்ள நான்கு பொருள்களின் பெயர்களை எழுது.

8-ம் பாடத்தில் வந்துள்ள இரண்டு மிருகங்களின் பெயர்களை எழுது.

II. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களை எடுத்து எழுது :—

1. வண்டி குடைக் கவிழ்ந்தது.
2. சேவல் காலையில் கூவுகிறது.
3. மதுரை ஒரு பழைய நகரம்.
4. முருகன் பள்ளிக்கூடம் போகிறான்.
5. நாய் வீட்டைக் காக்கிறது.
6. காக்கை மரத்தின்மீது இருக்கிறது
7. சிறுவன் படம் எழுதுகிறான்.
8. சிறுமி துணி தைக்கிறாள்.

மனிதர்களின் பெயர்	மிருகங்களின் பெயர்	பறவைகளின் பெயர்	பொருட்களின் பெயர்	இடங்களின் பெயர்

11. போலீஸ் சேவகர்



ஒழுங்காக	அபாயம்	இடப்புறம்
வலப்புறம்	ஏற்படும்	மோதிக்கொள்ளும்
சரியாக	விதி	சாலை
சேதப்படும்	பின்பற்றி	இனிமேல்

முருகன் :—மாமா, இதோ நிற்கும் இவர் யார்?

மாமா :—முருகா, இவர் போலீஸ் சேவகர்.

முருகன் :—இவர் ஏன் இங்கு நிற்கிறார்?

மாமா :—இவர் இந்தச் சாலையில் வரும்வண்டிகளையும், போகும்வண்டிகளையும் ஒழுங்காகப் போகும்படியும், வரும்படியும் செய்வார். அதோ பார், ஒரு

மோட்டார் வருகிறது. அது இவருக்கு எதிரே இருந்து வருகிறது. இவருக்கு வலப்புறம் இருந்து மற்ருெரு மோட்டார் வருகிறது. இவர் இந்த மோட்டாரை நிறுத்த, தமது வலக்கையை நீட்டுகிருர். இந்தமோட்டார் நின்றுவிட்டது. உடனே அந்த மோட்டார் தடை இல்லாமல் போக வழி உண்டாகிறது. இவர் அது போனவுடன் இதைப் போகச் செய்வார்.

முருகன் :—இவர் இங்கு இல்லாவிட்டால் இந்த வண்டிகள் சரியாகப் போகாவோ ?

மாமா :—ஆம். சில சமயங்களில் சரியாகப் போகும். சில சமயங்களில் இரண்டும் மோதிக் கொள்ளும். அதனுல், இரண்டு வண்டிகளும் சேதப்படும். அதோடு வண்டிகளில் இருப்பவர்க்கும் அபாயம் ஏற்படும். இக் கெடுதிகளை நீக்கவே இவர் இங்கு இருக்கிருர்.

முருகன் :—இவர் மனிதரையும் இப்படி நிற்கச் செய்வாரோ ?

மாமா :—இல்லை, இல்லை. நாம் சாலையின் இடதுபுறம் போகவேண்டும். நமக்கு எதிரில் வருபவர் வலதுபுறம் வரவேண்டும். இந்த விதியைப் பின்பற்றி நடப்பவர்க்கு அபாயம் வராது.

முருகன் :—அப்படியா! சரி. நான் இனிமேல் பள்ளிக்கூடம் போகும்போது சாலையின் இடப்புறமே

போவேன். வரும்போதும் இடப்புறமே வருவேன். வலப்புறம் போகமாட்டேன்.

எதிர்ப்பதங்கள் :— வலப்புறம் × இடப்புறம்
வலது புறம் × இடது புறம்
போவேன் × வருவேன்

. .

1. கேள்விகள்

1. போலீஸ் சேவகர் என்ன செய்கிறுர் ?
2. அவர் சாலைகள் கூடும் இடத்தில் இராவிடில் என்ன நஷ்டம்?
3. நீ சாலையில் எப்பக்கம் போகவேண்டும்? எப்பக்கம் வர வேண்டும்?

2. பயிற்சி

1. போலீஸ் சேவகரைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல்; பிறகு அவற்றை எழுது.

2. சாலையைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல்; அவற்றை எழுது.

3. வலப்புறம், பின்பற்றி, விதி, அபாயம்—ஒவ்வொன்றையும் தனித்தனி வாக்கியத்தில் எழுது.

4. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து எழுது:—

(அ) நீ சாலையின் ———— போகவேண்டும்.

(ஆ) நீ சாலையின் ———— வரவேண்டும்.

(இ) போலீஸ்—-இல்லாவிடில் சாலையில்-—உண்டாகும்.

(ஈ) ———— சேவகர் கையை ———— நிற்கிறது.

12. முழுத் திருடன்

சாமர்த்தியமாக	படிப்படியாக	மடையா
பிறர்	உச்சி	நிதானமாக
அகப்படுவது	பறிக்க	கோபம்
வெறுத்தனர்	ஆரம்பித்தான்	சொந்தக்காரன்
விரும்பினுன்	அரிந்து	கோவிந்தன்
புகுந்தான்	ஆத்திரம்	

குறிப்பு :—இக்கதையை மனத்திற்குள் படி; படித்த பிறகு சொல்.

1. கோவிந்தன் என்பவன் ஒரு திருடன். அவன் சாமர்த்தியமாகத் திருடுவான். அவன் பிறர் கையில் அகப்படுவதே இல்லை. ஊரார் அனைவரும் அவனை வெறுத்தனர்.

2. அவன் ஒருநாள் தேங்காய் திருட விரும்பினுன். அவன் தென்னந் தோப்புக்குள் புகுந்தான். கோவிந்தன் ஒரு தென்னை மரத்தின் மீது ஏறினுன். அவன் படிப்படியாக மரத்தின் உச்சியை அடைந்தான். அவன் தேங்காய் பறிக்கக் கையை நீட்டினுன்.

3. ஆ! அச்சமயம் அந்தத் தோப்புக்குச் சொந்தக்காரன் அங்கு வந்தான். அவன் கோவிந்த

னைப் பார்த்துவிட்டான். உடனே அவனுக்குக் கோபம் வந்தது. அவனைக் கண்டதும் கோவிந்தன் இறங்க ஆரம்பித்தான்.

4. சொந்தக்காரன் கோவிந்தனைப் பார்த்து, "அடே! கோவிந்தா, ஏன் மரத்தின்மீது ஏறினுய்?" என்று கேட்டான். உடனே கோவிந்தன், "ஐயா, கன்றுக்குப் புல் அரிந்து போக மரத்தின்மீது ஏறினேன்" என்முன்.

5. சொந்தக்காரன் ஆத்திரம் அடைந்தான். அவன் கோவிந்தனைப் பார்த்து, "அடே, மடையா! புல் தென்னை மரத்தில் இருக்குமா?" என்று கோபத்துடன் கேட்டான். கோவிந்தன் நிதானமாக, "ஐயா, மரத்தின்மீது புல் இல்லாததால்தான் இறங்கிவிட்டேன்" என்று சொல்லிக்கொண்டே கீழே குதித்தான்; உடனே ஓடிவிட்டான்.

எதிர்ப்பதங்கள் :— ஏறினுன் × இறங்கினுன்
உச்சி × அடி

1. கேள்விகள்

1. கோவிந்தன் எப்படிப்பட்டவன்?
2. கோவிந்தன் தென்னந்தோப்பில் என்ன செய்தான்?
3. தோப்புக்குச் சொந்தக்காரன் கோவிந்தனை என்ன கேட்டான்?
4. அதற்குக் கோவிந்தன் கூறிய பதில் யாது?

2. பயிற்சி

1. கோவிந்தனைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல்; பின்பு அவற்றை எழுது.
2. தென்னந் தோப்பைப் பற்றி 3 வாக்கியங்கள் சொல்; அவற்றை எழுது.
3. வெறுத்தனர், கோபம், உச்சி, ஆத்திரம்—ஒவ்வொன்றையும் அமைத்துத் தனித்தனி வாக்கியம் எழுது.
4. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து எழுது:—
   (அ) புல் ———— மரத்தில் ———— ?
   (ஆ) கோவிந்தன் ————த் திருடுவான்.
   (இ) அவன் ————த் தென்னை ———— உச்சியை ————.
5. இக்கதையிலிருந்து 10 பெயர்ச் சொற்கள் எடுத்து எழுது.

---

13. பருத்திக் கதை

நூல்	மாறியது	உருவம்
இழை	பின்னர்	காட்டுக்காரர்
நெசவுக்காரர்	உடன்பிறந்த	கோணிப்பை
தறி	படுத்தியபாடு	மனைவி
நெருப்பு	சலவைப்பெட்டி	வேகவைப்பான்
இறுக	படும்பாடு	காயவைப்பான்

1. குழந்தாய், எனது கதையைக் கேள்; நான் பருத்திச் செடியில் இருந்து பிறந்தேன். பருத்திக் காட்டுக்காரர் என்னை எடுத்துக் கூடையில் போட்டனர்; பிறகு கோணிப்பையில் அடைத்தனர்; என்னைக் கடைக்கார

னுக்கு விற்றனர். கடைக்காரன், என் உடன்பிறந்த கொட்டைகளைப் பிரித்தான்; என்னைத் தனியே விட்டான்.



2. நான் கடைக்காரனிடம் சிலநாள் இருந்தேன். பிறகு துணி நெய்பவர் கடைக்கு வந்தார். அவர் என்னை வாங்கிக் கொண்டார். அவர் மனைவி என்னை நூல் இழையாகச் செய்தாள். அதனால், நான் நூல் இழைகள் ஆனேன்.



3. நெசவுக்காரர் என்னைத் தறியில் இட்டார். நான் பல இழைகளாகச் சிதறி இருந்தேன். அவர் என் இழைகளை ஒன்று சேர்த்தார். அவர் செய்த வேலைக்கு 'நெசவு நெய்தல்' என்பது பெயர். பிறகு, அவர் என் இழைகளை இறுகச் சேர்த்தார். என் உருவம் நான்கு முழ ஆடையாக மாறியது.



4. அவர் எனது நான்கு ஓரங்களிலும் சிவப்பு வர்ணம் அடித்தார். நான் நல்ல வேஷ்டியாக மாறினேன். பின்னர் என்னை ஜவுளிக் கடைக்காரர் வாங்கிக் கொண்டார். அப்போது முருகன் என்பவன் ஜவுளிக் கடைக்கு வந்தான். அவன் பத்தணுக் கொடுத்து என்னை வாங்கினான்.



5. நான் முருகன் கட்டும் வேஷ்டி ஆனேன். அவன் என்னைப் படுத்திய பாடு சொல்லமுடியாது. அவன் தினந் தோறும் என்னைக் கல்மீதுபோட்டு அடிப்பான். அவனுடைய வண்ணான் முனியன் என்பவன். அவன் வாரத்துக்கு ஒரு முறை என்னை அடுப்பில் வேகவைப்பான். கல்மீது போட்டு அடிப்பான்; வெயிலில் காயவைப்பான்.

6. முனியன் என்னைப் பெஞ்சுமீது படுக்க வைப்பான்; அவனிடம் சலவைப்பெட்டி ஒன்று இருக்கிறது. அவன் அதனுள் நெருப்புப் போடுவான். சலவைப் பெட்டி மிகுந்த சூடாக இருக்கும். முனியன் அப்பெட்டியைக் கையில் எடுப்பான். அவன் அதை என்மீது வைத்துத் தேய்ப்பான். ஆ அப்போது நான் படும்பாடு சொல்லவும் கூடுமோ?

தம்பீ, என்மீது உனக்கு இரக்கம் உண்டாகிறதா? இல்லையா?

1. கேள்விகள்

1. பருத்தியின் கதை என்ன?
2. அது வேஷ்டியான பின் எப்படிக் கஷ்டப்பட்டது?
3. வண்ணான் அதனைப் படுத்திய பாடு யாது?
4. நீ அதைப்பற்றி என்ன நினைக்கிறாய்?

2. பயிற்சி

1. வண்ணனும் வேஷ்டியும் — என்பதுபற்றி மூன்று வாக்கியங்கள் சொல்; பிறகு அவற்றை எழுது.
2. நெசவுக்காரரும் பருத்தியும் — என்பதுபற்றி மூன்று வாக்கியங்கள் சொல்; அவற்றை எழுது.
3. சலவைப்பெட்டி, படும்பாடு, இறுக, நெசவுக்காரர்--ஒவ்வொன்றையும் தனித்தனி வாக்கியத்தில் வைத்து எழுது.
4. கோடிட்ட இடங்களை நிரப்பு:—

   (அ) வண்ணன் என்னைக்——— மீது ——— அடிப்பான்.

   (ஆ) சலவைப் ——— மிகுந்த ——— இருக்கும்.

   (இ) அப்போது நான் ——— சொல்லவும் ———?

   (ஈ) அவர் செய்த ——— நெசவு ——— என்பது பெயர்.
5. இக்கதையிலிருந்து 10 பெயர்ச்சொற்கள் எடுத்து எழுது.

---

14. ஆமையும் முயலும்

பந்தயம்	தூரம்	திடீரென
தோற்கடிப்பேன்	பாய்ந்து பாய்ந்து	விழித்தது
முடிவில்	பாதி	பயன்
தலைப்பட்டன	முன்பு	வெட்கம்
சித்தம்	மெள்ள மெள்ள	குறித்த இடம்
பொது ஆள்	தாமதித்தல்	

குறிப்பு:—இக்கதையைப் பிள்ளைகளைக் கொண்டு நாடகமாக நடித்துக் காட்டுக.

1. முயல் வேகமாய் ஓடுவது. ஆமை மெதுவாய் ஓடுவது. ஒருநாள் முயலும், ஆமையும் பந்தயம்

பேசிக் கொண்டன. முயல், "நான் தான் வேக மாய் ஓடுவேன்" என்றது. ஆமை, "நான் உன்னைத் தோற்கடிப்பேன்" என்றது.

2. முடிவில் இரண்டும் ஓடச் சித்தம் ஆயின. இரண்டும் நரியைப் பொது ஆளாக வைத்துக்கொண் டன. இரண்டும் போய்ச் சேர வேண்டிய இடம் தூரத்தில் இருந்தது. அந்த இடத்தில் நரி உட் கார்ந்திருந்தது.

3. முயலும், ஆமையும் ஓடத் தலைப்பட்டன. முயல் பாய்ந்து பாய்ந்து ஓடியது. பாதி தூரம் போனதும் முயல் திரும்பிப் பார்த்தது. ஆமை காணப்படவில்லை. முயல் அந்த இடத்திலேயே படுத்துத் தூங்க ஆரம்பித்தது.

4. ஆமை மெள்ள மெள்ள நகர்ந்து வந்தது. அது, வழியில் தூங்கிக் கொண்டு இருந்த முயலைக் கண்டது. அது அங்கே தாமதிக்கவில்லை. அது மெதுவாகவே போய்க் கொண்டு இருந்தது. முயல் நன்றாய்த் தூங்கி விட்டது.



5. முடிவில், ஆமை குறித்த இடத்தை அடைந்து விட்டது. முயல் திடீரென விழித்தது. அது உடனே ஓடிவந்தது. வந்து பயன் என்ன? அது தனக்கு

முன்பே ஆமை வந்து விட்டதைக் கண்டது. அது மிகவும் வெட்கப்பட்டது.

1. கேள்விகள்

1. முயலும், ஆமையும் என்ன பேசிக்கொண்டன?
2. முயல் ஏன் வழியில் தூங்கினது?
3. ஆமை எப்படி ஜெயம் அடைந்தது?
4. இப்பாடத்தால் நீ என்ன அறிகிறாய்?

2. பயிற்சி

1. முயலின் கருவம்—என்பதுபற்றி 3 வாக்கியங்கள் சொல்; பிறகு அவற்றை எழுது.
2. ஆமையின் அடக்கம்—என்பதுபற்றி 3 வாக்கியங்கள் சொல்; அவற்றை எழுது.
3. பந்தய ஓட்டம்—என்பது பற்றி 3 வாக்கியங்கள் சொல்; அவற்றை எழுது.
4. பாய்ந்து பாய்ந்து, மெள்ள மெள்ள, திடீரென, பொது ஆள்—தனித்தனி வாக்கியத்தில் ஒவ்வொன்றையும் அமைத்து எழுது.
5. கோடிட்ட இடங்களை நிரப்பு :—

   (அ) முயல் ——— ஓடும்.

   (ஆ) —— மெதுவாய் ———.

   (இ) வழியில் ——— தூங்கிவிட்டது.

   (ஈ) —— தூங்கவில்லை.

15. தமிழ் நாடு-பாட்டு



திருப்பதி	எம் நாடு	வளரும்
குமரிமுனை	கங்கையணி	சேரன்
செழிக்க	சிவபெருமான்	பாண்டியன்
வங்கக்கடல்	கனிந்து	என்னும்
அரபிக்கடல்	ஆர அமர	தமிழர்
எல்லை	புலவர்கள்	அணி
தமிழ்	ஆராய்ந்த	

1. திருப்பதிக்குத் தெற்கினிலே தமிழ் வளரும் நாடு;
   திருக்குமரி முனை வடக்கே தமிழ் வளரும் நாடு.

2. வங்கக்கடல் மேற்கினிலே தமிழ் வளரும் நாடு;
   அரபிக்கடல் கிழக்கினிலே தமிழ் வளரும் நாடு.

3. இந்நான்கு எல்லைகட்குள் இருப்பதெங்கள் நாடு.
   இந்நாட்டைத் 'தமிழ் நாடு, எம் நாடு' என்போம்.

4. தமிழ் நாட்டில் இருப்பவர்கள் தமிழர்களே ஆவார்.
தமிழ் நாட்டார் பேசுவதும் தமிழ் மொழியே ஆகும்.

5. எங்கள் தமிழ் இனியதமிழ் என்றுமுள்ள தமிழே.
கங்கையணி சிவபெருமான் கனிந்துரைத்த தமிழே.

6. சேரசோழ பாண்டியர்கள் செழிக்க வைத்த தமிழே.
ஆர அமரப் புலவர்களும் ஆராய்ந்த தமிழே.

—வித்துவான், மா. இராசமாணிக்கம், B. O. L

பயிற்சி 8.

பதினாலாவது பாடத்தில் நாலாவது பாராவில் எத்தனை வாக்கியங்கள் இருக்கின்றன? வாக்கியம் முடியும் இடத்தில் என்ன அடையாளம் இருக்கிறது? வாக்கியத்தின் முடிவில் போட்டிருக்கும் புள்ளி, வாக்கியம் முடிந்துவிட்டது என்பதைக் காட்டுகிறது. அதற்கு 'முற்றுப்புள்ளி' என்று பெயர்.

சரியான இடங்களில் புள்ளிகளைப்போடு :—

நான் ஒரு கோழி வளர்க்கிறேன் அது நல்ல கோழி அழகான கோழி நான் அதற்குத் தீனிபோடுவேன் அது தீனி தின்னும் என்னோடு விளையாடும் அது பெட்டைக்கோழி அது முட்டையிட்டது முட்டை வெண்மை நிறம் முட்டையில் இருந்து குஞ்சு தோன்றும் குஞ்சு அழகாய் இருக்கும் சேவல் காலையில் கூவும் சேவல் கூவ எழுந்திரு நான் உடனே எழுந்து கொள்வேன் நான் பாடம் படிப்பேன்

பயிற்சி 9.



கதை

படத்தைப் பார்த்துக் கீழ்க்கண்ட கேள்விகளுக்குக் பதில் சொல்.

படம் 1. பையன் எங்கிருந்து எங்கு போகிறுன் ?

படம் 2. பையன் வழியில் எதைச் சந்திக்கிறுன் ?

படம் 3. பையன் என்ன செய்கிறுன் ?

படம் 4. வண்டி என்ன செய்கிறது ?

படம் 5. பையன் என்ன ஆனுன் ?

படம் 6. அவனுக்கு உண்டானது என்ன ?

மற்ருெரு பையன் என்ன செய்கிறுன் ?

இக்கதையில் இருந்து நீ என்ன தெரிந்து கொண்டாய் ?

இனிமேல் நீ என்ன செய்யமாட்டாய் ?

பதிலைக் கற்பலகையில் எழுது.

இந்தக் கதைக்கு நீயே சரியான தலைப்பு எழுது.

16. ஆறு



மிகுதியாக	பேஷ்	மூலம்
கடக்க	விவரம்	ஏரி
செல்லலாம்	மழைக்காலம்	கால்வாய்
வாழ்கிறோம்	முடியாது	விளைச்சல்

முருகன்:—வேலா, நாம் இன்று ஆற்றுக்குப் போவோம். நான் ஆற்றைப் பார்த்ததே இல்லை. ஆற்றைப் பற்றிய விவரங்கள் உன்னைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

வேலன்:—வா, போவோம் ...... முருகா, இது தான் ஆறு.

முருகன்:-இதுவா! இது எங்கிருந்து வருகிறது?

வேலன்:—இது மலையிலிருந்து வருகிறது. மழைக்காலத்தில் தண்ணீர் மிகுதியாக வரும்.

முருகன் :—தண்ணீர் அதிகமாக வரும்பொழுது ஆற்றைக் கடக்க முடியாதோ ?

வேலன் :—முடியும். அதோ பார், பாலம். அதன் மீது நடந்து செல்லலாம். அதன் மீது வண்டிகளும் போகும்.

முருகன் :—இந்த ஆற்று நீர் முடிவில் எங்கே போகிறது.

வேலன் :—ஆற்று நீர் கடலில் கலக்கிறது.

முருகன் :—ஆற்று நீர் கடலில் கலப்பதால் நமக்கு என்ன லாபம்? வயல்களுக்குப் பயன் படுகிறதா ?

வேலன் :—ஆம். ஆற்று நீர் வயல்களுக்கே பயன் படும். மிகுந்த நீரே கடலில் போய்ச் சேரும். ஆற்றில் அணை கட்டப்பட்டு இருக்கும். அந்த அணை, நீரை ஏரிகளுக்குப் பிரித்து விடும். ஏரி நீர் கால்வாய் மூலம் வயல்களுக்குப் பாயும். ஆற்று நீரால் தான் நமது நாட்டில் நெல் விளச்சல் அதிகம்.

முருகன் :—பேஷ் ! ஆற்ருல் நெல் விளைகிறது. நெல்லைக் கொண்டு நாம் வாழ்கிரும். ஆற்று நீரால் நாம் வாழ்கிரும்.

எதிர்ப்பதங்கள் :—

லாபம் × நஷ்டம்

அதிகம் × குறைவு

1. கேள்விகள்

1. ஆறு எங்கிருந்து வருகிறது ?
2. ஆற்றால் உபயோகம் என்ன ?
3. ஆற்றால் நாம் வாழ்வது எப்படி ?
4. அணையின் வேலையாது ?

2. பயிற்சி

1. ஆற்றைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல் ; அவற்றை எழுது.
2. ஏரியைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல் ; அவற்றை எழுது.
3. அணையைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல் ; அவற்றை எழுது.
4. நெல் வயலைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல் ; அவற்றைஎழுது.
5. லாபம், அணை, வாழ்கிறோம், மூலம்—ஒவ்வொன்றையும் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.
6. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைத்து எழுது:—

(அ) மழைக் காலத்தில் ——— தண்ணீர் ——— வரும்.

(ஆ) பாலத்தின் மீது ——— போகலாம்.

(இ) ——— அணை ———.

(ஈ) நெல்லைக் ——— நாம் ———.

17. அறிவுள்ள நாய்

ஓசை	மருந்து	குணம்
இரத்தம்	வடிந்துகொண்டே	இட்டுக்கொண்டு
வைத்தியர்	காயம்	அடைந்தது

1. ஒரு நாயின் கால் மீது வண்டிச் சக்கரம் ஏறிவிட்டது. பாவம்! அது ஓசை இட்டுக் கொண்டே எழுந்தது; நொண்டி நொண்டிப் போனது. அதன் காலில் இரத்தம் வடிந்து கொண்டே இருந்தது.



2. அப்போது அந்த வழியே வைத்தியர் ஒருவர் வந்தார். அவர் நாயைக்கண்டார். அவர் அதன் காலைப் பார்த்தார். அவருக்கு இரக்கம் உண்டாயிற்று. அவர் அந்த நாயைத் தம் வீட்டுக்குத் தூக்கிச் சென்ருர். அவர் அதன் காலில் மருந்துவைத்துக் கட்டினர்.



3. வைத்தியர் மிகவும் நல்லவர். அவர் தினந்தோறும் நாயைக் கவனித்தார்; காலில் மருந்துவைத்துக் கட்டினர். சில நாள்களுக்குள் காயம் ஆறி விட்டது. நாய் அவரை மறக்கவே

இல்லை. அது அவரைக் கண்டால் வாலை ஆட்டும். வைத்தியர் நாயின் அறிவைப் பாராட்டினர்.



4. ஒரு நாள் அந்த நாய், வேருெரு நாயுடன் வைத்தியர் வீட்டுக்குப்போனது. புதிய நாயின் காலில் காயம் உண்டாகி இருந்தது. வைத்தியர் பழைய நாயின் செயலைக் கண்டு ஆச்சரியப்பட்டார்; புதிய நாயின் காலில் மருந்து வைத்துக் கட்டினர். பழைய நாய் அவருக்குத் தன் சந்தோஷத்தைத்தெரிவித்து வாலை ஆட்டி நின்றது. சில நாள்களுக்குள் புதிய நாய் குணம் அடைந்தது.

தம்பீ, நாயின் அறிவைப் பார்த்தாயா?

1. கேள்விகள்

1. நாய் எப்படிக் குணம் அடைந்தது?
2. நாய் தனது நன்றியை வைத்தியருக்கு எப்படித் தெரிவித்தது?
3. பழைய நாய் புதிய நாயை ஏன் வைத்தியரிடம் அழைத்துச் சென்றது?
4. நாய் எப்படிப்பட்ட பிராணி?

2. பயிற்சி

1. பழைய நாயைப் பற்றி 3 வாக்கியங்கள் சொல்; பின்பு அவற்றை எழுது.

2. புதிய நாயைப் பற்றி மூன்று வாங்கியங்கள் சொல்; அவற்றை எழுது.

3. உன் வீட்டு நாயைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல்; அவற்றை எழுது.

4. ஓசை இட்டு, குணம் அடைந்தது, காயம், வைத்தியர்—ஒவ்வொன்றையும் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.

5. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைத்து எழுது :—

(அ) நாயின்————வண்டிச்————ஏறிவிட்டது.

(ஆ) வைத்தியர்————காலில்————வைத்துக்————.

(இ) நாய்————பிராணி.

---

18. கிராமம்

சுமார்	கிராமம்	அளப்பார்
மணியக்காரர்	மாடிவீடு	ஆட்டுக்கடா
பிண்ணாக்கு	உழுது	நடைபெறும்
கிராம-முனிசீப்பு	தபால் ஆபீஸ்	வரி-வசூல்
அதிகாரி	உதவியாக	வாணியன்
கவனிப்பார்	கணக்குப்பிள்ளை	

முதல் பகுதியைக் கவனித்துப்படி.

1. நமது நாட்டில் கிராமங்கள் அதிகம் கிராமத்தில் சுமார் ஐந்நூறு வீடுகள் இருக்கும் அவற்றுள் மாடி வீடுகள் சில; குடிசை வீடுகள் பல

கிராமத்தில் சில தெருக்களே இருக்கும் அவையும் சிறியவையாக இருக்கும்

2. கிராமத்தாருள் பலர் உழுது பயிர் செய்பவர்கள். தச்சன், கொல்லன், வண்ணான், வாணியன் முதலிய தொழிலாளரும் இருப்பர். தச்சன்



கலப்பை முதலியவற்றைச் செய்வான். கொல்லன் அரிவாள் முதலிய இரும்புச் சாமான்கள் செய்வான். வாணியன் எண்ணெய் ஆட்டுவான்; மாடுகளுக்குப் பிண்ணாக்குத் தருவான்.

3. கிராமத்தில் சிறிய பள்ளிக்கூடம் இருக்கும். அதில் ஆண்களும் பெண்களும் படிப்பார்கள். பெரிய கிராமத்தில் பெண்களுக்குத் தனியே பள்ளிக்

கூடம் உண்டு. பெரிய கிராமத்தில் 'தபால் ஆபீஸ்' இருக்கும். வைத்தியசாலேயும் இருக்கும்.

4. கிராமத்தில் கிராம-முனிசீப்பு என்பவரே பெரிய அதிகாரி. அவர் கிராமத்தில் நடக்கும் சண்டை சச்சரவுகளைத் தீர்ப்பார். அவருக்கு உதவி யாகக் கணக்குப் பிள்ளை இருப்பார். இவர் நிலங்களை அளப்பார். இவர் பயிரைக் கவனிப்பார். வரியை வசூல் செய்பவர் மணியக்காரர். சிறிய கிராமத்தில் கிராம-முனிசீப்பே மணியக்காரர் வேலையையும் பார்ப் பார்.

5. சில கிராமங்களில் சேவல் சண்டை, ஆட் டுக்கடாச் சண்டை முதலியவை நடைபெறும். கிரா மத்தில் காளி கோயில், முனியன் கோயில், மாரியம் மன் கோயில், ஐயனர் கோயில் இவற்றுள் ஒன்று இருக்கும். கிராமத்தார் கோயிலில் பொங்கல் இடு வர்; ஆடிப் பாடுவர்.

I. எதிர்ப் பதங்கள் :— சில × பல.

1. கேள்விகள்

1. கிராம முனிசீப்பு, மணியக்காரர், கணக்குப்பிள்ளை—இவர் கள் வேலை என்ன?
2. கிராமப் பள்ளிக்கூடத்தில் யார் யார் படிப்பார்கள்?
3. கிராமத்தில் உள்ள தொழிலாளர்கள் யாவர்?
4. கிராமத்தில் வீடுகள், தெருக்கள் எப்படி இருக்கும்?

2. பயிற்சி

1. கிராம அதிகாரிகளைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல்; பிறகு அவற்றை எழுது.

2. கிராமப் பள்ளிக்கூடம் பற்றி 3 வாக்கியங்கள் சொல்; அவற்றை எழுது.

3. கிராமத் தொழிலாளரைப் பற்றி 3 வாக்கியங்கள் சொல்; பிறகு எழுது.

4. நீ பார்த்த கிராமத்தைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல்; அவற்றை எழுது.

5. சுமார், கலப்பை, அதிகாரி, பிண்ணாக்கு—ஒவ்வொன்றையும் தனித்தனி வாக்கியத்தில் வைத்து எழுது.

6. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து எழுது:—

(அ) கிராமத்தில் ——— தெருக்களை ———.

(ஆ) மணியக்காரர் ——— வசூல் ———.

(இ) கிராம முனிசீப்பு ——————த் தீர்ப்பார்.

(ஈ) கிராம முனிசீப்பே —————— யையும் பார்ப்பார்.

---

19. முடைதல் தொழில்

சிறிய	விற்பனை	பிளந்து
சிம்புகள்	அவசியம்	மற்றொருவர்
மெல்லியவை	முன்னரே	சீவுதல்
முதிராத	எடுக்க	பெரிய கூடை
நல்லவேலை	வைக்க	மண் கூடை
முடைந்து	உபயோகம்	குடிசைத்தொழில்
ஏராளமாக	தூக்குக்கூடை	

1. கூடை, காய் கறி வாங்கி வைக்க உதவும். கூடை, மண் எடுக்கப் பயன்படும். கூடை, அரிசி

முதலியவை வைக்க உதவும். கூடை பல வேலை களுக்கு உபயோகப்படும். முறமும் அப்படியே. தூக்குக் கூடை காய்கறி வாங்க உதவும்.

2. கூடையும் முறமும் எதனுல் செய்யப்படு கின்றன? மூங்கிலால் செய்யப்படுகின்றன. படத் தைப் பாருங்கள். ஒருவர் மூங்கிலைச் சிறிய சிம்பு களாகப் பிளந்து போடுகிருர். மற்றொருவர்



அவற்றை மெல்லியவாகச் சீவுகிருர். முதிராத மூங்கிலே சீவ உதவும்.

3. படத்தில் உள்ள பெண்களைப் பாருங்கள். அவர்கள் மெல்லிய சிம்புகளைக் கூடையாக முடை கிருர்கள். அவர்கள் முன்னரே முடைந்து வைத் துள்ள பொருள்களைப் பாருங்கள். தூக்குக் கூடை, முறம், பெரிய கூடை, சிறிய கூடை, மண் கூடை இருக்கின்றன.

4. முடைதல் தொழில் நல்ல வேலை. இது ஒரு குடிசைத் தொழில் ஆகும். இத்தொழிலால் பலர் பிழைக்கின்றனர். கூடை முறம் இல்லாத வீடு உண்டா? கூடைகளும், முறங்களும் ஏராளமாக விற்பனை ஆகின்றன. இத்தொழில் என்றும் சோறு போடுவது. இம்மாதிரித் தொழில் ஒன்றை நீங்கள் அறிந்துகொள்ளுதல் அவசியம் ஆகும்.

எதிர்ப்பதம்:—மெல்லிய × தடித்த.

1. கேள்விகள்

1. படத்தில் உள்ள ஆடவர் என்ன செய்கின்றனர்?
2. படத்தில் உள்ள பெண்கள் என்ன செய்கின்றனர்?
3. முடைதல் தொழில் எப்படிச் சோறு போடும்?
4. இத்தொழிலுக்கு வேண்டிய பொருள் எது?
5. மூங்கிலால் வேறு என்னென்ன பொருள்களைச் செய்யலாம்?

2. பயிற்சி

1. நீ பார்த்த கூடைக்கடை ஒன்றைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல்; பிறகு அவற்றை எழுது.
2. நீ பார்த்திருக்கும் கூடைகள் எவை? அவற்றைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல்; பிறகு எழுது.
3. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து எழுது:—

(அ) முடைதல் ——— நல்ல ———.

(ஆ) ——— தொழில் ——— போடும்.

(இ) மூங்கிலால் ——— யும் ——— மும் ———.

(ஈ) ——— பாயும் ———.

4. முடைதல், ஏராளம், விற்பனை, அவசியம்—ஒவ்வொன்றையும் தனித்தனி வாக்கியத்தில் வைத்து எழுது.

5. உதவும்—இதே அர்த்தத்தைத் தரும் இரண்டு சொற்கள் சொல்; அவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுது.

---

20. பயிர்த் தொழில்—பாட்டு

மாரி	களிப்பு	சேறு
செஞ்சாலி	கார்	சீராய்
செழிக்கும்	களம்	வாரி
வளநாடு	அளப்பார்	அறுப்பார்
நாற்று	போர்	நெற்படுத்தி
பள்ளர்	வேளாளர்	மும்மாரி
குழப்பி	மன்னர்	நல்லதங்காள்
கயல்மீன்	விளைந்தது	

1. மாதம்மும் மாரிபெய்யும் மன்னர் திருநாடு;
2. செஞ்சாலி நெல்விளைந்தே செழிக்கும் வளநாடு;
3. நாற்றைப் பிடுங்கிப் பள்ளர் நன்ருய் நடுவார்கள்;
4. சேற்றைக் குழப்பிப் பள்ளர் சீராய் நடுவார்கள்;
5. வயலில் களைபிடுங்கி வாரி எறிவார்கள்;
6. கயல்மீன் பிடித்திடுவர்; களிப்புடன் ஆடிடுவர்;
7. கார்நெல் அறுப்பார்கள்; களத்தில் அடிப்பார்கள்;
8. கார்நெல் அளப்பார்கள்; களிப்பொடு வாழ்வார்கள்;
9. போரடித்து நெற்படுத்திப் பொங்கல் இடுவார்கள்;
10. ஏரடிக்கும் வேளாளர் என்றுமே வாழ்வார்கள்.

—நல்லதங்காள் கதை

பயிற்சி 10.

கோடிட்ட இடங்களில் சரியான சொற்களை அமைத்துப் படி :—

அப்போது —— வழியே —— ஒருவர் ———. அவர் ———க் கண்டார். அவர் ——— காலைப் ———. அவருக்கு ——— உண்டாயிற்று. அவர் ——— நாயைத் ——— வீட்டுக்குத் ———ச் சென்றார். அவர் ——— காலில் ——— வைத்துக் ———. ——— மிகவும் ———ர். அவர் ——— நாயைக் ———.

மருந்து ———க் கட்டினார். சில ——— காயம் ———. நாய் அவரை ——— ———. அது ——— கண்டால் ——— ஆட்டும்.

19-ம் பாடத்தில் வந்துள்ள 5 பெயர்ச் சொற்களை எழுது.

பயிற்சி 11.

நாய் என்ன செய்தது? —— போனது.

வைத்தியர் என்ன செய்தார்? —— கட்டினார்.

போனது என்ற சொல் நாய் செய்த வேலையைத் தெரிவிக்கிறது.

கட்டினார் என்ற சொல் வைத்தியர் செய்த வேலையைத் தெரிவிக்கிறது.

இவ்விதம் வேலை அல்லது செய்கையைத் தெரிவிக்கும் சொற்களுக்கு வினைச்சொற்கள் என்று பெயர்.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள வினைச் சொற்களைக் குறிப்பிடு :

காகம் பறக்கிறது. காற்று வீசுகிறது.

நாய் ஓடுகிறது. மழை பெய்கிறது.

பிள்ளைகள் விளையாடுகிறார்கள்.

17-ம் பாடத்தில் இருந்து 10 வினைச் சொற்களை எடுத்து எழுது.

21. சுடும் பழமா? சுடாத பழமா?

நாவல் மரம்	பசி	மணல்
கருமை	சுடும்பழம்	ஊதினுள்
அழுந்தின	சுடாதபழம்	சிரித்தான்
இன்னது	வேண்டும்	அறிவு
விளங்கவில்லை	யோசித்தாள்	வாழ்த்தி

குறிப்பு:—இக்கதையைப் பிள்ளைகளைக்கொண்டு நாடகமாக நடித்துக் காட்டுக.

1. படத்தைப் பாருங்கள். படத்தில் இருப்பது நாவல் மரம். அதன் பழங்கள் கருமையாக இருக்கும். அப்பழங்களை ஒரு சிறுவன் பறித்துப் போடுகிருன். மரத்தின் கீழே பாட்டி ஒருத்தி இருக்கிருள், பாருங்கள். அவள் அங்கு பசியோடு வந்தாள்.



2. பாட்டி, பையனைப்பார்த்து, "பிள்ளாய், சில பழங்கள் பறித்துப் போடு. எனக்குப் பசி அதிகமாக இருக்கிறது" என்ருள். பையன், "பாட்டி, சுடும் பழம் வேண்டுமா?

சுடாத பழம் வேண்டுமோ? இன்னது வேண்டும் என்று சொன்னால் பறித்துப் போடுகிறேன்" என்றான்.

3. பாட்டி யோசித்தாள். "சுடும் பழம் எது? சுடாத பழம் எது? ஒன்றும் விளங்கவில்லையே. சரி. இவனைக் கேட்பதேன்" என்று தனக்குள் எண்ணினாள். அவள், "அப்பா, சுடும் பழமே போடு" என்றாள்.

4. சிறுவன் கனிந்த பழங்களைப் பறித்துப் போட்டான். அவை கீழே விழுந்து அழுந்தின. அவற்றில் மணல் ஒட்டிக்கொண்டது. பாட்டி பழத்தை எடுத்து மணலை ஊதினாள். சிறுவன் சிரித்தான்; "பாட்டி, ஏன் ஊதுகிறாய்? பழம் சுடுகிறதா?" என்றான்.

5. பாட்டி யோசித்தாள்; பையன் அறிவைப் பாராட்டினாள். அவள் அவனை வாழ்த்திச் சென்றாள்.

எதிர்ப் பதங்கள்:—

சிறுவன் × சிறுமி

சுடும் (பழம்) × சுடாத (பழம்)

1. கேள்விகள்

1. பையன் பாட்டியைக் கேட்ட கேள்வி யாது?
2. பாட்டி என்ன சொன்னாள்?
3. சுடும் பழம் எது? சுடாத பழம் எது?
4. பையனைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?

2. பயிற்சி

1. பாட்டியைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல்; பிறகு அவற்றை எழுது.
2. பையனைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல்; அவற்றை எழுது.
3. அவன் அறிவைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல்; பிறகு எழுது.
4. இன்னது, விளங்கவில்லை, அழுந்தின—ஒவ்வொன்றையும் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.
5. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து எழுது.
   (அ) கனிந்த———சுடும்———.
   (ஆ) ———பழம்——— பழம்.
   (இ) மரத்தின் கீழே———ஒருத்தி———.
   (ஈ) பாட்டி———அறிவைப்———.

---

22. அன்னங்களும் ஆமையும்

வறண்டு	ஆகாத	சுமந்து
நடுப்பாகம்	உடன்போனது	கொம்பு
மடிவாய்	உரத்து	நழுவியது
தீர்மானித்தன	தயவு	பொத்தென்று
கழி	அவமானம்	நீதி
ஏற்பாடு	ஐயோ	யாது
அதிசயம்	பரிகசித்தனர்	இறந்தது
குளம்	ஆரவாரம்	

குறிப்பு—கதையை மனத்திற்குள் படி; பிறகு சொல்.

1. ஒரு குளத்தில் ஓர் ஆமையும், இரண்டு அன்னங்களும் வாழ்ந்து வந்தன. ஒரு வருஷம்

மழை பெய்யவில்லை. அக்குளம் வறண்டு விட்டது. அதனால், அன்னங்கள் வேறு குளத்துக்குப் போகத் தீர்மானித்தன. ஆமை, தன்னையும் கொண்டு செல்லும்படி வேண்டிக்கொண்டது.

2. அன்னங்கள் பறந்து போகும். ஆமையோ பறக்க முடியாது. என்ன செய்வது என்று அன்னங்கள் யோசித்தன. அவை முடிவில் ஒரு மூங்கில் கழியைக் கொண்டு வந்தன. அவை ஆமையைப் பார்த்து, "நண்பனே! இந்தக் கழியின் இரண்டு முனைகளையும் நாங்கள் வாயால் கௌவிக் கொள்கிறோம். கழியின் நடுப்பாகத்தை நீ கௌவிக்கொள். நாங்கள் பறந்து போகும்போது நீயும் எங்களுடன் வருவாய். ஆனால், நீ வழியில் வாயைத் திறந்தால் கீழே விழுந்து மடிவாய்" என்றன.

3. அந்த ஏற்பாட்டின்படி அன்னங்கள் பறந்து சென்றன. ஆமையும் உடன் போனது. இந்த அதிசயத்தைப் பூமி மீது நின்று கொண்டு இருந்த சிலர் பார்த்தனர். அவர்களில் சிலர் ஆச்சரியத்தால் உரத்துக் கூவினர். சிலர் "கையால் ஆகாத ஆமை, அன்னங்களின் தயவால் போவதைப் பாருங்கள்" என்று கூறிப் பரிகசித்தனர்.



4. அவர்கள் ஆரவாரத்தை மேலே பறந்து சென்ற அன்னங்கள் கேட்டன; ஆமையும் கேட்டது. ஆமைக்கு அவமானமாக இருந்தது. அதற்குக் கோபம் வந்தது. அது, என் நண்பர்கள் இஷ்டப்பட்டு என்னைச் சுமந்து போகிறார்கள். இதைப்பற்றி உங்கட்கு என்ன?" என்று கேட்க வாயைத் திறந்தது. ஐயோ, பாவம்! அது வாயைத் திறந்ததும் கொம்பிலிருந்து நழுவியது; 'பொத்' தென்று கீழே விழுந்து இறந்தது.

இப்பாடத்திலிருந்து நீ அறியும் நீதி யாது?

1. கேள்விகள்

1. குளத்து நீர் ஏன் வற்றியது?
2. அப்போது அன்னங்கள் என்ன செய்ய யோசித்தன?
3. ஆமையைக்கொண்டுபோக அவை என்ன ஏற்பாடு செய்தன?
4. ஆமையைக் கண்டவர்கள் என்ன என்ன பேசிக்கொண்டார்கள்?
5. ஆமை ஏன் வாயைத் திறந்தது? திறந்ததன் பயன் என்ன?

2. பயிற்சி

1. ஒரு குளத்தைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல்; பிறகு அவற்றை எழுது.
2. பாடத்தில் வந்துள்ள ஆமையைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல்; பின்னர் அவற்றை எழுது.
3. அன்னங்களைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல்; அவற்றை எழுது.
4. கழி, முனை, ஏற்பாடு, அவமானம், தயவு—ஒவ்வொன்றையும் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.
5. இப்பாடத்திலிருந்து 8 வினைச்சொற்களை எடுத்து எழுது.

23. விளையாட்டு

உறுப்பு	உரம்	மூச்சு
அசுத்தம்	பெறும்	மூச்சுப்பை
பெறுவாய்	வியர்வை	பயிற்சி
பஸ்கி	கழிகிறது	தண்டால்
அளிப்பது	இப்படி	எடுப்பது

1. இப்படத்தில் உள்ள பிள்ளைகள் தண்டால் எடுக்கிறார்கள். தண்டால் எடுப்பது கைகள், கால்கள், இடுப்பு, கழுத்து, மார்பு இவற்றிற்கு நல்ல





பயிற்சி அளிப்பது ஆகும். இவ்வுறுப்புகள் பலம் அடையும். நீ தினந்தோறும் 6 தண்டால் எடு. நீ பலம் பெறுவாய்.



2. இப்படத்தில் இருக்கும் பிள்ளைகள் 'பஸ்கி' எடுக்கிறார்கள். இவர்கள் நின்று, கால்கள் மீது உட்காருகிறார்கள். இப்படி நின்று உட்காருதல் 'பஸ்கி' எனப்படும். இப்பயிற்சியால் கைகள், கால்கள் பலம் அடையும். இதுவும் நல்ல பயிற்சியே.



3. இங்குப் பிள்ளைகள் பந்து விளையாடுகிருர்கள். இவர்கள் ஓடி விளையாடுவதைப் பார். இவர்கள் ஓடி விளையாடுவதால் அதிகமாக மூச்சு வாங்கி



விடுகிருர்கள். இதனுல் மார்பு அகலமாகிறது; மூச்சுப்பை பெருத்துச் சிறுக்கிறது. இதனுல் இரத்தம் சுத்தம் அடைகிறது. ஓடுவது கால்களுக்குப் பலம். இந்த விளையாட்டால் எல்லா உறுப்புக்களும் உரம் பெறும்.



4. இங்குப் பிள்ளைகள் ஓடுவதைப் பார். இவர்கள் ஓட்டத்தால் அதிகமாக மூச்சு விடுகிருர்கள்.

உடம்பில் உள்ள அசுத்த இரத்தம் எல்லாம் வியர் வையாகக் கழிகிறது. இரத்தம் சுத்தப்படுகிறது. சுத்த ரத்தம் உடம்புக்கு நல்லது. ஓட்டம் கைகால் களுக்கு நல்லது; இரத்தத்தைச் சுத்தப்படுத்தும். தம்பீ, நீ தினமும் ஓடிப் பழகு.

1. கேள்விகள்

1. 'தண்டால்' என்ருல் என்ன? அதனுல் என்ன பயன்?
2. 'பஸ்கி' என்ருல் என்ன? அதனுல் என்ன பயன்?
3. பந்தாட்டத்தால் என்ன நன்மை?
4. ஓடுவதால் என்ன நன்மை?
5. உனக்கு எந்த விளேயாட்டுகளில் பிரியம் உண்டு?

2. பயிற்சி

1. படத்தில் காட்டப்பட்டுள்ள விளேயாட்டுகளில் உனக்குப் பிரியமானது எது? அதைப்பற்றி 3 வாக்கியங்கள் சொல்.
2. உன் பள்ளிக்கூடத்தில் நடைபெறும் விளேயாட்டுகள் எவை? அவற்றைப் பற்றி 3 வாக்கியங்கள் சொல்; பிறகு எழுது.
3. நீ எந்த விளேயாட்டை விரும்புகிருய்? ஏன்?—மூன்று வாக்கியங்களில் பதில் எழுது.
4. பயிற்சி, தண்டால், பஸ்கி, இரத்தம்—ஒவ்வொன்றையும் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.

24. வீட்டு வேலை

அருமை	முளைக்கீரை	பட்டியல்
பழக்கம்	அகத்திக்கீரை	ஒவ்வொரு
மூலம்	முருங்கைக்கீரை	கரிக்கடை
அடுப்புக்கரி	கூலி ஆள்	இவற்றோடு
அரைக்கீரை	சேமைக்கிழங்கு	கொத்தவரைக்காய்

1. நான் என் பாடங்களை ஒழுங்காகப் படிக்கிறேன். நான் தினமும் பள்ளிக்கூடம் போகிறேன். இவற்றோடு நான் வீட்டு வேலைகளையும் செய்வது உண்டு. என் அருமைத் தாயார் சில வேலைகளைச் செய்யச் சொல்வார். நான் அவற்றைப் பிரியமாய்ச் செய்வேன். நான் செய்யும் வீட்டு வேலைகள் எவை ?

2. நான் மளிகைக் கடைக்குப் போவேன். என் தகப்பனுரும் என்னுடன் வருவார். கடையில் நானே பட்டியலைப் பார்த்து வேண்டும் பொருள்களைச் சொல்வேன். கடைக்காரர் ஒவ்வொரு பொருளாகத் தருவார். அவற்றை என் தகப்பனுர் வாங்கிக் கொள்வார். இப்பழக்கத்தால் வீட்டுக்கு வேண்டும் மளிகைச் சாமான்கள் எல்லாம் நான் தெரிந்துகொண்டேன். இவை உங்களுக்குத் தெரியுமா ?

3. நானே கரிக்கடைக்குப் போவது உண்டு; அடுப்புக்கரி மூட்டையை ஓர் ஆள் மூலம் கொண்டு வருவேன்; அவனுக்குக் கூலி அரை அணுக் கொடுப்பேன். எங்கள் வீட்டுக்கு மாதம் மூன்று மூட்டை கரிகள் வேண்டும்.

4. நான் காய்கறிக் கடைக்குப் போவேன். கத்தரிக்காய், வெண்டைக்காய், கொத்தவரைக்காய், புடலங்காய், முருங்கைக்காய், அரைக்கீரை, முளைக்கீரை, அகத்திக்கீரை, முருங்கைக்கீரை, உருளைக்கிழங்கு, கறணைக்கிழங்கு, சேமைக்கிழங்கு முதலியன வாங்கி வருவேன். நான் வாங்கும் கடைக்காரர்கள் நல்லவர்கள். அவர்கள் நல்ல பொருள்களையே எனக்குக் கொடுப்பார்கள்.

என்னைப் போல நீங்களும் வீட்டு வேலை செய்வீர்களா ?

1. கேள்விகள்

1. பையன் என்னென்ன வீட்டுவேலைகள் செய்வான்?
2. மளிகைக் கடையில் பையன் கற்றுக் கொண்டது என்ன ?
3. அவன் காய்கறிக் கடையில் எவற்றை வாங்குவான் ?
4. நீ அவ்வேலைகளைச் செய்வது உண்டா?
5. நீ என்ன வேலைகளைச் செய்கிறாய் ?

2. பயிற்சி

1. மளிகைக் கடைப்பொருள்களில் ஏழின் பெயர் சொல்; பிறகு அவற்றை எழுது.
2. காய்கறிக்கடைப் பொருள்களில் ஆறின் பெயர் சொல்; அவற்றை எழுது.
3. முளைக்கீரை, உருளைக்கிழங்கு, அடுப்புக்கரி, மளிகைக்கடை — தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.
4. கோடிட்ட இடங்களை நிரப்பு :—
   (அ) ———— கடையில் சாம்பிராணி ———— .
   (ஆ) அரைக்கீரை ———— கடையில் ——— .
   (இ) அடுப்புக்கரி ———— கடையில் விற்கும்.
   (ஈ) மிளகாய் ——— கடையில் ——— .
5. இப்பாடத்தில் உள்ள 10 வினைச் சொற்களை எழுது.

25. எங்கள் வேலை—பாட்டு

வேண்டிய	குலாவி	வாவென
உள்ளம்	நாடொறும்	தோழர்
பதிய	குறை	இன்னமும்
கூழ்	இசைப்பாட்டு	கழுவுதல்
ஆவலாய்	கூட	

1. காலையில் நேரத் தெழுந்திடுவோம் ;—முகம்
கைகால் வாயும் கழுவிடுவோம் ;

2. பள்ளிக்கு வேண்டிய பாடங்களை—எலாம்
உள்ளம் பதியப் படித்திடுவோம் ;

3. வீட்டினில் உள்ள பழங்கூழை—சுவை
மிக்கதேன் பாலென உண்டிடுவோம் ;

4. வாவெனப் பள்ளி மணி அடித்தால்—உடன்
ஆவலாய்ப் பள்ளிக்குச் சென்றிடுவோம் ;

5. ஆசிரியர் சொல்லும் பாடங்களை—மிக
அன்புடன் கேட்டுத் தெரிந்துகொள்வோம் ;

6. கூடப் படித்திடும் தோழருடன் ;—ஒன்றாய்க்
கூடிக் குலாவியே வாழ்ந்திடுவோம் ;

7. ஆடையைத் தோய்த்தே உடுத்திடுவோம் ;—நீ
ராடியே நாடொறும் உண்டிடுவோம் ;

8. மாலையில் ஓடியே ஆடிடுவோம் ;—மகிழ்
வாகவொன் றாகவே கூடிடுவோம் ;

9. வீட்டு வேலைகள் முடித்திடுவோம் ;—இசைப்
பாட்டுகள் பாடிக் களித்திடுவோம் ;

10. இன்னமும் வேண்டிய செய்திடுவோம் ;—ஆக
என்ன குறையினி எங்களுக்கே.

பயிற்சி 12.

குறிப்பு:—கீழேயுள்ள படங்களைப் பார்த்துக் கதை எழுது; அக்கதைக்கு உன் இஷ்டம்போல் ஒரு பெயர் கொடு.



பயிற்சி 13.

ஒரு குளத்தில் ஓர் ஆமையும், இரண்டு அன்னங்களும் வாழ்ந்து வந்தன.

இந்த வாக்கியத்தில் வந்துள்ள பெயர்ச் சொற்கள் எவை ?

ஆமை—இந்தப் பெயர்ச்சொல் ஒரு பொருளைக் குறிக்கிறது.

அன்னங்கள்—இந்தப் பெயர்ச் சொல் பல பொருளை (ஒன்றுக்கு அதிகமான)க் குறிக்கிறது.

ஒரு பொருளைக் குறிக்கும் பெயர்ச் சொல் ஒருமைப் பெயர் எனப்படும். பல பொருளைக் குறிக்கும் பெயர்ச் சொல் பன்மைப் பெயர் எனப்படும்.

நீ படித்த பாடங்களில் வந்துள்ள ஒருமைப் பெயர் ஐந்து, பன்மைப் பெயர் ஐந்து—எடுத்தெழுது.

	ஒருமை	பன்மை
1.	மனிதன்	மனிதர்
2.	சிறுவன்	———
3.	———	பெண்கள்
4.	மாடு	———
5.	———	மரங்கள்
6.	மலை	———
7.	அவன் அவள்	———

26. சிறியோர் தொண்டு

லாடம்	செஞ்சிலுவை	வழுக்கி
பொறுக்குகிறீர்கள்	சங்கம்	புழுதி
கண்ணுடித்துண்டு	சுகாதாரம்	அப்புறப்படுத்தல்
முதலியவை	விருத்தி	மெல்ல
போகிறவர்	ஆபத்து	பரிசு
வருகிறவர்	உலகில்	கொஞ்சம்
ஏறும்	முக்கியமான	கஞ்சி
துன்பம்	கொடி	செம்மணி
தைத்தால்	பெருக்குதல்	செல்வி
கிழிந்துவிடும்	சிறியோர்	குவிந்து

1. பெரியவர் :—தம்பீ, எதற்காகத் தெருவில் கிடக்கும் லாடங்களைப் பொறுக்குகிறீர்கள் ?

சிறுவன் :—தாத்தா, வழியில் ஆணி, லாடம், கண்ணுடித் துண்டு முதலியவை கிடந்தால் போகிறவர், வருகிறவர் காலில் ஏறும். அவர்கள் துன்பப்படுவார்கள். சைக்கிள் வண்டி, மோட்டார் வண்டிகளின் சக்கரங்களில் அவை தைத்தால் கிழிந்து விடும் அல்லவா ? அதற்காக எடுக்கிறேம்.

பெரியவர் :—நல்ல பிள்ளைகள்! உங்களை யாரப்பா இவற்றைப் பொறுக்கி எறியச் சொன்னார்கள்?

சிறுவன் :—தாத்தா, நாங்கள் சிறியோர் செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள். அச்சங்கத்தின் கட்டளை இது.

பெரியவர் :—ஓகோ! தம்பீ, இன்னும் நீங்கள் என்னென்ன உதவி செய்வீர்கள்?

சிறுவன் :—சுகாதாரத்தை விருத்தி பண்ணுதல், நோயாளிகளுக்கும், போரில் காயப்படுவோருக்கும், இன்னும் ஏதாவது ஆபத்துக்குள்ளானோர்க்கும் உதவி செய்தல்; உலகில் உள்ள எல்லா நாட்டுச் சிறுவர், சிறுமியர்களுக்குள்ளும் ஒற்றுமையை வளர்த்தல் ஆகிய இவை மூன்றும் எங்களுடைய முக்கியமான வேலையாகும்.

பெரியவர் :—ஆஹா! நல்ல வேலை!

2. சிறுவன் :— தாத்தா, ஓரமாகப் போங்கள்.

பெரியவர் :- நீங்கள் கொடி பிடித்துக்கொண்டு எங்கே போகிறீர்கள்?

சிறுவன் :—அடுத்த ஊரில் மாரியம்மன் திருவிழா நடக்கிறது. அங்கே பெருங் கூட்டம் கூடும். வண்டிகளும் வரும். அதனால், யாருக்காவது ஆபத்து

உண்டாகும். அதற்காக வழியை ஒழுங்கு செய்யப் போகிறோம்.

பெரியவர் :—ஒஹோ! நீங்களும் செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்தவர்களா ?

சிறுவன் :— ஆமாம். தாத்தா.

3. சிறுமி :—வண்டியை மெதுவாக ஓட்டுங்கள். ஓரமாகப் போங்கள்.

4. பெரியவர் :— குழந்தைகளே, நீங்கள் எதற்காகத் தெருவைப் பெருக்குகிறீர்கள்?

சிறுமி :—தாத்தா, இங்கே பழத்தோல் குவிந்து கிடக்கிறது. நடப்போர் வழுக்கி விழுந்துவிடுவார்கள். புழுதியில் நடந்தால் நோய் உண்டாகும் அல்லவா? அதற்காக அவற்றை அப்புறப்படுத்துகிறோம்.

பெரியவர் :—ஐயோ! அப்பா! (வழுக்கி விழுதல்)

சிறுமி :— தாத்தா! தாத்தா!! நான் சொல்லவில்லையா? அடடா, கை ஒடிந்து விட்டது. கண்ணகி சீக்கிரம் துணி கொண்டுவா, கட்டலாம்.

5. பெரியவர் :—ஐயோ ! அப்பா !

சிறுமி :—தாத்தா, மெல்ல நடந்துவாருங்கள் ; வைத்தியசாலைக்குப் போகலாம்.

பெரியவர் :— குழந்தைகளே, சுகமாய் இருங்கள்.



6. சிறுமி :—
ஐயா, கொஞ்சம் கஞ்சி குடியுங்கள்.

நோயாளி :—உம். வேண்டாம். வைத்தியர் வரவில்லையா?

சிறுமி :—பின்னுல் வருகிறுர்.



7. செல்வி :—செம்மணி, எங்கே உன் கண்ணுடி ?

தாயார் :—என்ன செல்வி ?

செல்வி :—அம்மா, நேற்று உங்கள் செம்மணி சுத்தமாக வந்ததற்காக முதற் பரிசு பெற்ருள்.

தாயார் :—அதுவா ? நீ ?

செல்வி .—எனக்கு இரண்டாம் பரிசுதான் கிடைத்தது.

1. கேள்விகள்

1. செஞ்சிலுவைச் சங்கத்தின் முக்கியமான கொள்கைள் எவை?
2. வழியில் எப்படி நடக்கவேண்டும் ?
3. பழத்தோலை ஏன் எடுத்தெரியவேண்டும் ?
4. இப்பாடத்தைப் படித்தபிறகு நீ என்ன செய்யப்போகிருய்?
5. செம்மணி வீட்டினரைப்பற்றி நீ என்ன நினைக்கிருய் ?

2. பயிற்சி

1. இப்பாடத்தை நாடகமாக நடியுங்கள்.
2. நீ கதையாகச் சொல்.
3. நீ இச்சம்பவங்களை நேரில் பார்த்தவனைப்போல் சொல்.

27. புத்திமதி

உறுதி	செலவழிக்க	செய்திகள்
பரீக்ஷை	கேள்வி	பிற்காலம்
முழுவதும்	பதில்	முக்கியமான
தேறுவது	பழகுதல்	இந்தமுறை
அனைவரும்	பார்வையிட	கணக்கு
சகோதரர்	நோட்டுப்புத்தகம்	விடப்படும்
அடக்கம்	படிய	கையெழுத்து

1. பிள்ளைகளே, நாம் இந்த வருஷம் முழுவதும் இந்த வகுப்பில் இருக்கின்றோம். இவ்வருஷப் பரீக்ஷை விரைவில் வரப் போகிறது. நீங்கள் அதில் தேறினால், விடுமுறைக்குப் பிறகு நான்காம் வகுப்புக்குப் போவீர்கள். நீங்கள் எல்லோரும் நன்றாய்ப் படிக்க வேண்டும்; கேள்விகளுக்குத் தகுந்த பதில் எழுத வேண்டும்; அப்படிச் செய்தால், நீங்கள் அனைவரும் பரீக்ஷையில் தேறுவது உறுதி.

2. இந்த வருடம் முழுவதும் நாம் ஒரு குடும்பத்தவர் போல வாழ்ந்து வந்தோம். நீங்கள் சகோதரர் போல நடந்து வந்தீர்கள். நீங்கள் என்னிடம் அடக்கமாகவும், அன்பாகவும் இருந்தீர்கள். இதை நான் என்றும் மறவேன். நீங்கள் மற்ற ஆசிரியர்களிடமும் இப்படியே அடக்கமாகவும், அன்பாகவும் இருக்க வேண்டும்.

3. பரீக்ஷை முடிந்த பின் உங்களுக்கு விடுமுறை விடப்படும். அது ஒரு மாதகாலம் இருக்கும். நீங்கள் அக்காலத்தை நல்ல வழியில் செலவழிக்க வேண்டும். பல சிறிய தமிழ் நூல்களைப் படிக்க வேண்டும்; கையெழுத்துப் படிய நன்ருய்த் தமிழ்ப் பாடங்களை எழுத வேண்டும்; கணக்குப் போட வேண்டும்; பாட்டுப் புத்தகங்கள் வாங்கி இசையோடு பாடிப் பழகுதல் வேண்டும்.

4. உங்களில் சிலர் வேறு ஊர்களுக்குப் போகலாம். அப்படிப் போகிறவர்கள், அவ்வூர்களில் உள்ள முக்கியமான இடங்களைப் பார்வையிட வேண்டும். அவற்றைப்பற்றிய செய்திகளைச் சிறிய நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். இந்த முறை உங்களுக்குப் பிற்காலத்தில் மிகுந்த நன்மையைத் தரும்.

5. என் அருமைப் பிள்ளைகளே, நான் சொன்ன புத்தி மதிப்படி நீங்கள் நடப்பீர்களா? அப்படி நடந்தால் கடவுள் உங்களுக்கு எல்லா நன்மைகளும் செய்வார்.

எதிர்ப்பதங்கள் :—வெளியூர் × உள்ளூர்.
பிற்காலம் × முற்காலம்.

1. கேள்விகள்

1. ஆசிரியர் கூறிய புத்திமதிகள் எவை?

2. வெளியூர்களுக்குப் போவோர் என்ன செய்யவேண்டும்?

3. பிள்ளைகள் விடுமுறையில் என்ன செய்யவேண்டும்?

4. ஆசிரியரும், பிள்ளைகளும் மூன்றும் வகுப்பில் எப்படி இருந்தார்கள்?

5. பிள்ளைகள் ஆசிரியரிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டும்?

2. பயிற்சி

1. நீ உன் ஆசிரியரிடம் எப்படி நடந்து கொள்கிருய்? 3 வாக்கியங்களில் பதில் சொல்.

2. நீ கோடை விடுமுறையில் என்ன செய்வாய்? 3 வாக்கியங்களில் பதில் சொல்.

3. நீ வெளியூருக்குப் போனுல் என்ன செய்வாய்? 3 வாக்கியங்களில் பதில் சொல்.

4. அனைவரும், எல்லாரும்—பொருள் என்ன?

5. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து எழுது:—

(அ) நீங்கள்————நன்ருய்ப்————வேண்டும்.

(ஆ) பாடல்களை————பாடவேண்டும்.

(இ) கை————ப்படியத்தமிழ்ப்————எழுதவேண்டும்.

பயிற்சி 14.

கோடிட்ட இடங்களில் ஏற்றசொல்லை அமைத்து எழுது:—

1. நான் பூந்தோட்டத்துக்குப்———.
(போனேன், போனான்)
2. மரங்கள் காற்றுக்கு———. (விழுந்தது, விழுந்தன)
3. காக்கையும், புறாவும்———. (பறந்தது, பறந்தன)
4. நீ நாளை பள்ளிக்கு———.
(வருவேன், வருவாய் வந்தாய்)
5. என் தங்கை மாலை———. (கட்டினான், கட்டினாள்)
6. அவள் நேற்று ———.
(விளையாடுவாள், விளையாடினாள்)
7. தம்பி கணக்கு———.
(போடுகிறாள், போடுகிறான், போடுகிறார்கள்)
8. மீன் நீரில்———.
(நீந்துகின்றன, நீந்துகிறது, பறக்கிறது)
9. அவள் ஊருக்குப்———.
(போகிறான், போகிறாள் போகிறார்கள்)
10. சூரியன் காலையில்———.
(மறைகிறது, தோன்றுகிறது)
11. தம்பி என்னோடு பள்ளிக்கு———.
(வந்தான், தூங்கினான்)
12. அவர்கள் வேலை———.
(செய்கிறான், செய்கிறாள், செய்கிறார்கள்)

பயிற்சி 15.

முதல் வரிசையிலுள்ள ஒவ்வொரு சொற்களுடனும், இரண்டாவது வரிசையில் உள்ளவற்றில் எதைச் சேர்த்தால் சரியான வாக்கியம் ஆகும்? அவற்றைச் சேர்த்துச், சரியான வாக்கியங்களை எழுது :—

1.	நான்	ஒருவர் வந்தார்.
2.	கூடை	எந்த வகுப்பில் வாசிக்கிறாய் ?
3.	இரத்தம்	மணியைக் காட்டுகிறது.
4.	சொந்தக்காரன்	துன்பப்படுவார்கள்.
5.	எனக்கு	தினமும் பள்ளிக்கூடம் போகிறேன்.
6.	நீ	காய்கறி வாங்கி வைக்க உதவும்.
7.	அன்னங்கள்	பெய்து கொண்டே இருந்தது.
8.	அவர்கள்	ஆத்திரம் அடைந்தான்.
9.	வைத்தியர்	வருத்தத்தோடு வீடு திரும்பினாள்.
10.	மழை	சுத்தப்படுகிறது.
11.	அவள்	வேறு குளத்துக்குப் போகத் தீர்மானித்தன.
12.	சிறியமுள்	இரண்டாம் பரிசுதான் கிடைத்தது.

செய்யுட் பாடம்

1. கல்வி

1. ஓதுவது ஒழியேல்.
2. இளமையில் கல்.
3. எண் எழுத்து இகழேல்.
4. நூல் பல கல்.
5. வித்தை விரும்பு. —ஆத்திசூடி
6. எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்.
7. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
8. ஓதாதார்க்கு இல்லை உணர்வோடும், ஒழுக்கம். —கொன்றைவேந்தன்
9. ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம். —உலகநீதி

எண் - கணக்கு. வித்தை - கல்வி. மெய்ப்பொருள் - அழியாப்பொருள். உணர்வு - அறிவு.

2. பெற்றோர்

10. தந்தை தாய்ப் பேண். —ஆத்திசூடி
11. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். —கொன்றைவேந்தன்
12. மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம். —உலகநீதி

பேண் - (கிழப்பருவத்தில்) காப்பாற்று. பிதா - தந்தை. மாதா - தாய்.

3. பெரியோர் சொல்

13. மேன்மக்கள் சொற்கேள். —ஆத்திசூடி
14. மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம். —கொன்றைவேந்தன்
15. மூத்தோர்சொல் வார்த்தைதனை மறக்கவேண்டாம். —உலகநீதி

மேன்மக்கள் - அறிவும் அனுபவமும் உடையவர்கள். மூத்தோர் - அறிவு முதிர்ந்த பெரியோர்.

4. நட்பு

16. இணக்கம் அறிந்து இணங்கு. —ஆத்திசூடி
17. நல்லிணக்கம் அல்லது அல்லல் படுத்தும்.—கொன்றைவேந்தன்
18. நல்லிணக்கம் அல்லாரோடு இணங்கவேண்டாம். —உலகநீதி

இணக்கம் - சிநேக குணம். அல்லல் - துன்பம்.

5. நன்றி

19. நன்றி மறவேல். —ஆத்திசூடி
20. செய்தநன்றி ஒருநாளும் மறக்கவேண்டாம். —உலகநீதி

நன்றி - உபகாரம்.
செய்த நன்றி - பிறர் செய்த உபகாரம்.

6. ஊக்கம்

21. ஊக்கமது கைவிடேல். —ஆத்திசூடி
22. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு. —கொன்றைவேந்தன்

கைவிடேல் - விட்டுவிடாதே. ஆக்கம் - செல்வம்.

7. கோபம்

23. ஆறுவது சினம். —ஆத்திசூடி
24. தீராக்கோபம் போராய் முடியும். —கொன்றைவேந்தன்
25. முன்கோபக் காரரோடு இணங்கவேண்டாம். —உலகநீதி

ஆறுவது - தணிய வேண்டுவது. சினம் - கோபம்.

8. பொய்

26. கண்டொன்று சொல்லேல். —ஆத்திசூடி
27. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம். —உலகநீதி

கண்டு ஒன்று - ஒன்றைக்கண்டு வேறொன்றை, பொய்.
நெஞ்சு ஆர - மனமறிய.

9. காரியம்

28. தூக்கி வினை செய். —ஆத்திசூடி
29. நுண்ணிய கருமமும் எண்ணித்துணி. —கொன்றைவேந்தன்
30. கருதாமல் கருமங்கள் செய்யவேண்டாம். —உலகநீதி

தூக்கி - ஆராய்ந்து. வினை - தொழில். (காரியம்) நுண்ணிய - சிறிய. எண்ணி - ஆலோசித்து. கருதாமல் - யோசியாமல்.

10. பொருள்

31. பொருள்தனைப் போற்றி வாழ். —ஆத்திசூடி
32. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
33. அஃகமும், காசும் சிக்கெனத் தேடு. —கொன்றைவேந்தன்
34. தனம்தேடி உண்ணாமல் புதைக்கவேண்டாம். —உலகநீதி

போற்றி - காத்து. திரை - அலை. திரவியம். செல்வம்-அஃகம் - தானியம். புதைத்தல் - பெட்டியில் போட்டுப் பூட்டிவைத்தல்.

11. பயிர்த்தொழில்

35. பூமி திருத்தி உண்
36. பருவத்தே பயிர் செய்.
37. நெற்பயிர் விளை. —ஆத்திசூடி
38. சீரைத்தேடின் ஏரைத் தேடு.
39. மேழிச் செல்வம் கோழை படாது.
40. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.

—கொன்றைவேந்தன்

திருத்தி - சீர்திருத்திப் பயிர்செய்து. பருவம் - விளையும் காலம். சீரை - நல்வாழ்வை. ஏர் - பயிர்த்தொழில். மேழிச்செல்வம் - உழவுத் தொழில். கோழை - குறைவு. தொழுது - பிறரை வணங்கி (சேவித்து) ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி - இம்மூன்று நூல்களும் ஔவையாரால் பாடப்பட்டவை. உலகநீதி - உலகநாதர் என்பவ ரால் பாடப்பட்டதென்றும் சொல்வர்.

குறிப்பு.— இச்செய்யுட்களை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும்படி செய்க; பாட்டின் கருத்து, குழந்தைகளின் மனத்திற் பதியும்படி செய்க.